# சீமைக் குரல்

## VOICE OF BRITAIN

வீட்டிற்கு ஒரு சீமைக் குரல் ! தமிழன் வாழ்வின் உரிமைக் குரல்

இதழ் : 8 • தை – JANUARY 2025 • பிரதம ஆசிரியர் பொன் பாலசுந்தரம்



BEAUTY COMPLEX EUROPE LTD

www.beautycomplex.co.uk


எண் சோதிடத்தில் துணை நிற்கும் தெய்வங்கள்

உலகக் கோடீஸ்வரர் காதல் தொடர்கதை



## சிங்கள – தமிழ் – முஸ்லிம்கள் ஒன்றாக வாழ்வோம்.

இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்


Rathi OrthoZen

முதுகு வலி, முழங்கால் வலிகள், மூட்டுவலிகள் கீல்வாதம், ஆஸ்டியோ ஆர்த்ரிடிஸ் மற்றும் பிற பொதுவான தசைவலிகளில் உங்களை முடக்க வேண்டாம்.

NUZEN GOLD HAIR OIL

Helps to generate new Hair

PREVENTS HAIR FALL

Beauty Complex Europe Ltd

29 / 33, Ealing Road, Wembley HA0 4YA

அழகு சாதன பொருட்களின் ஆலயம்

Desyham

Hair Darkening Shampoo

The safest way to color Hair

Herbul Black Henna

100% தூய மூலிகை மருதாணி பவுடர்

Rathi Shikakai Shampoo

கூந்தலை கருமைப்படுத்தி அதன் வேர் முதல் நுனி வரை பளபளப்பாக்கும்.

FAIRNEX CREAM for Amazing Face

எண்ணம் போல் வண்ண முகம் எழில் பெற...

Rathi Onion Shampoo

Promotes hair growth and prevents hair breakage


வீட்டிற்கு ஒரு சீமைக் குரல் ... உங்கள்வீடு தேடி வர...













**Disponible dans toutes les boutiques asiatiques**
**Available at all Asian shops**
அனைத்து தமிழ் கடைகளிலும் மற்றும் ஆசியன் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Imported & marketed by (Importé et commercialisé par)

**Subash European Ltd,**
**1, Rue Alfred Noble, 93600 Aulnay- sous - Bois, France**

ORDER

**00 33 65 28 27 303 /**
**00 33 66 96 67 571**

இலங்கை மற்றும் இந்திய மலிகைப்பொருட்கள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சீமைக் குரல்
SEEMAI KURAL
வீட்டிற்க்கு ஒரு சீமைக்குரல்! தமிழர் வாழ்வில் உரிமைக்குரல்!!

# அனுராவின் திறந்திருக்கும் அரசியல் கதவு! ஆனால் தமிழர்கள் ஒன்றுபடுவார்களா?

**தமது "அரசாங்கம் இனவாதத்தைக் கடைப்பிடிக்காது"**

சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்கள் மீதிருந்த அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கு தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திஸ்ஸநாயக்கா பகிரங்கமாக இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இதுவரை காலமும் அரசியல் வாதிகள் தமது சுகபோக வாழ்க்கைக்கு இனவாதத்தை ஒரு ஏணிப்படியாக பாராளுமன்றத்தைப் பயன்படுத்தியதையும் நாடறியும்.

இப்படி இனவாதத்தைப் பற்றிப் பேசுவதற்கு காரணிகளாக இருந்தவர்கள் இலங்கைவாழ் தமிழர்கள்தான் என்பதை மறைப்பதற்கில்லை.

சென்ற 75-80 வருடங்களாக தமிழர்களின் அடிப்படை உரிமைகள் படிப்படியாக பெரும்பான்மை மக்களின் அரசியல்வாத தலைவர்களினால் புறக்ணிக்கப்பட்டமை தான் காரணமாக இருந்ததை மறக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது.

1947-48ல் மலையகத் தமிழ் மக்களின் டி. எஸ். சேனநாயக்காவின் குடியுரிமைப் பறிப்பும், 1957ல் ஜே. ஆர். ஜயவர்த்தனவின் தமிழ் மொழிக்கு எதிரான கண்டி யாத் திரையும், 1958 கலவரத்தில் கொழும்பிலிருந்து கப்பல்களில் தப்பிவந்த தமிழர் களும், 1977ல் யாழ் நூலக எரிப்பும், 1983ல் நாடு பரவலாக தமிழர்க்கு எதிரான கலவரமும், சிங்கள மொழி ஆதிக்கமும், தமிழர்களுக்கு எதிராக ஏவிய சட்டங்களும் படிப் படியாக இனத் துவேஷத்தை வளர்க்கத் தீப்பந்தங்களாகின.

கண்ணியவான்களும், அரசியல் மேதை களும், தேசப் பற்றாளர்களும் எனத் தமக்குத் தாமே முடிசூடி பாராளுமன்றங்களை அலங்கரித்து வந்தவர்கள் தம்மைப் பண மூட்டைகளாக்கிக் கொண்டு சென்று விட்டார்கள்.

இன்று தூரத்தில் தெரியும் கலங்கரை விளக்கின் ஒளியாக அனுரா அவர்களைத் தலைமையாகக் கொண்ட பொது ஜன பெரமுன வரலாறு காணாத வெற்றி யைப் பெற்று பாராளுமன்றத்தைக் "கைப் பற்றி உள்ளது". 225 எம். பிக்களைக் கொண்ட சபையில் 159 ஆசனங்களைப் பெற்று அநுரா பதவியைக் கைப்பற்றியுள்ளார்.

தமிழர்களின் தனிமனித கட்சியைச் சேர்ந்த இராமநாதன் அர்ச்சுனா அவர்களும் தமது பாராளுமன்ற கன்னிப் பேச்சில் அநுரா அவர்களுக்குத் தமது வாக்கை அர்ப்பணம் செய்துள்ளார் போலும். (159-இப்போது 160) இனவாதம் தலைதூக்க அனுமதிக்கப் போவதில்லை என்பதில் ஜனாதிபதி அவர்களும், பிரதமர் ஹரிணி அமரசூர்யாவும், சக அமைச்சர்களும் உறுதியாக உள்ளனர். சிறுபான்மையின ருடன் ஒன்றிணைந்து செயற்படுவோம் என உறுதியளித்தும் வருகிறார்கள்.

இனி எந்தக் காலத்தில் எந்தக் கொள்கை உடையவர்கள் பதவிக்கு வருவார்களோ?

"காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" என்பார்கள். அரசியலில் எல்லாம் சகஜம்.

இக்காலகட்டம் தமிழர்களுக்கு ஒரு சோதனை மிகுந்த காலமாக இருக்கப் போகிறது. தமிழர்களைத் தாங்கி நிற்கும் கட்சிகள் சீர் குலைந்த நிலையில் உள்ளன.

வடமாகாணத்தில் மட்டும் 6-7 கட்சிகள் உள்ளன. தலைமைப் பதவி இல்லாத கட்சிகளும், தனிநபர் கட்சிகளும், காளான் கட்சிகளும் பரந்துள்ளதாகக் கூறுகிறார்கள்.

நிலைமை இப்படி இருக்கும்போது அரசாங்கம் எவருடன் பேச்சு நடத்த துணியும்?

**முதலில் தமிழ்த் தவைர்கள் ஒன்றுபட வேண்டும்.** அப்படி இல்லாவிட்டால் தமிழர்கள் ஒன்றாகத் திரண்டு தமிழர் நலன்பேணும் தமிழர்களைக் கொண்ட மகா சபையை பேசவைக்கலாம்.

**கொடுப்பதை எடுக்கும் தைரியமும், மேலும் தரவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்கும் துணிவும் உடைய தமிழ் தலைவர்கள் காலத்தின் கட்டாய தேவை.**



அனுரா அரசாங்கத்துடனான இந்தச் சந்தர்ப்பத்தையும் தமிழர்கள் இழக்க நேரிட்டால் சென்ற 80 வருட வாழ்க்கைதான் தமி ழர்களின் தலை விதியாகும்.

பிரதம அசிரியர்

**EDITOR IN CHIEF**
Dr . Pon Balasundaram

**CHIEF CONSULTANT**
Mr . R . Mathivanan

**PUBLISHER**
Beauty Complex Europe Ltd
House Of Seemai Kural

**ADMINISTRATION**
Mr. Kandiah A Jeyadeesan
Mrs . Jeyadeesan Rathinesvary

**REPORTERS**
sayanthini sivalingam
Sapeetha Thiruthanesan
Dwaraga Krishnarajan

**GRAPHICS DESIGNERS**
House Of Seemai Kural

**HEAD OFFICE:**
**House of Seemai Kural**
Unit 6 , Chandani Bazar,
29 / 33, Ealing Road,
Wembley, Middlesex HA0 4YA,
London (UK)

**CONTACT DETAILS**
Tel-00 44 ( 0 ) 208 900 10 91
00 44 ( 0 ) 77 10 64 63 59
E -admin@seemaikural .com

**BANK DETAILS**
Bank Name - Natwest Bank
House of Seemai Kural
Account number - 21 11 19 44
sode code - 52 - 10 - 33
SWIFTBIC - NWBKGB2L
Iban - GB 56 NWBK
52 10 33 21 11 19 44

உங்கள் விளம்பரம் இடம் பெற:
00 44 (0) 77 10 64 63 59

படைப்புகளில் இடம்பெறும்
பெயர்கள் கற்பனையே.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின்
உண்மைத் தன்மைக்கு
'சீமைக் குரல்' பொறுப்பாகாது.

# தமிழன் வாழ்வியல்

வானுக்கும் மண்ணுக்கும்
நடைபெறும் மாற்றத்தில்
சூரியன் சுழற்சி வைத்து
நாட்களை நகர்த்தும் நாம்
நாடிகளை நாழிகைகளாக்கி
நிமிடங்களாக்கி மணிகளாக்கி
ஒருநாள் இதுவே என்றோம்

மனித காலசக்கர நகர்வு
மனித உடல்வளர்சியைவிட
அதிவேகமாக நகர நகர
வாழ்வியல் தடுமாற்றம்
பெரும் சுழர்சிக்குள் சிக்க
மனிதம் நசுங்கதொடங்கியது
இதுவே உலகு இதுவே உண்மை

காலம் உனக்காக எனக்காக
எப்போதும் இருந்ததில்லை
புத்தியுள்ளவன் காலத்தோடு
நவீன கால மனிதனாய்
புது யுத்திகளை உபயோகிப்பான்
புதியவனாய் பயணிப்பான்

எதுவாகினும்...!
அன்றைய பொழுது அழகியது
எம் மரபை பின்பற்றியது
அனுபவம் கொண்டவர்கள் சூழ
அழகிய நகர்வுகள் கொண்டது
அழகாய் சொல்லித்தர பெரியவர்
அழகு நல் கலாச்சாரங்கள்
அன்புடன் பழக்கப்படுத்திய
அழகிய பழக்க வழக்கங்கள்

தமிழனுக்கு உண்டான வாழ்வு
தமிழ் மரபுக்கு உண்டான விவேகம்
தமிழ் கொண்டு பழக்கப்படுத்தினர்
தமிழ் புத்தாண்டு
தமிழ் தைப்பொங்கல்
தமிழ் மாட்டுப்பொங்கல்
தமிழ் தீபஒளி
தமிழ் கார்த்திகை தீபம்
தமிழ் விழாக்கள் வேடிக்கைகள்
தமிழ் ஆலய விஷேசங்களென
தமிழ் பண்டிகைகள் அழகியது
தமிழருக்கு மிக அவசியமானது

பொங்கள் தமிழரின் நன்றி சொல்லும்
திருநாள்
நிலம் தந்து நீர் தந்து
தம் உதிரம் தந்து
எம் பசி தீர்த்த உழவனுக்கும்
வானத்து சூரியனுக்கும்

எம்மோடு துணை நின்ற
கோமாதா, காளைக்கும்
நன்றி கூறும் நேரமிது

தாய் தந்தை தந்தைவழி வம்சம்
தாத்தா பாட்டி அப்பு ஆச்சி
மாமன் அத்தை சித்தப்பா சித்தி
அண்ணா அக்கா தம்பி தங்கை
சித்தப்பா சித்தி பெரியப்பா என
எத்தனை உறவுமுறை
வயற்காட்டு வரப்பில்
மாமன் பின் நடப்பதும்
வயற்காட்டு குளத்தில்
நீந்தி விளையாடுவதுமே
அழகிய தருணங்கள்
உனக்கு நான் எனக்கு நீ
தமிழ் பண்டிகைகள் தோறும்
சேர்ந்திடும் பந்தங்கள்
பண்பாடு சொல்லும் பாங்கு
எம் தமிழுக்கும் தமிழனுக்கும்
கொள்ளை தரும் அழகு

கால நகர்வு நகர்ந்து செல்வது
காலத்தின் வடிவை மாற்றிடும்
மிரட்டும் விஞ்ஞானம்
மாறுகின்ற சூழல்
இடையில் மனிதனென
உலகியல் வாழ்வில்
நடாத்தப்படும் நாடகத்தில்
அழுத்தம் காணும் மனிதம்
அடிபட்டுத்தான் நிமிரும்
பேசிப்பயனில்லை

இதுதான் நியதி இதுதான் உலகு
புரிந்து கொண்டவன் புத்திசாலியாவான்
நாமும் அவனும் ஒருவனாய் புதுமையான
புதியதுக்குள்
புதிதாய் பயணிப்போம்

வாருங்கள் பிறக்கின்ற
புத்தம் புது ஆண்டில்
புது பொலிவோடு பயணிப்போம்

**ரஞ்சனி (கனடா)**

# சமயத்தோடு மருவிய சங்குப் பூசை

## வீடுகளில் செய்வது நல்ல பலன்தரும்





ஸ்ரீலஸ்ரீ பா.வசந்தக் குருக்கள்
சைவப் புலவர், சைவ சித்தாந்த பண்டிதர்

மங்கலப்பொருட்களில் சங்கு முக்கிய இடம் பெறுகிறது. பூரணகும்பம் தீபம்,கண்ணாடி, பசு, இரட்டைச்சாமரை, சங்கு என இந்த மங்கலப் பொருட்கள் மிளிர்கின்றன. இவற்றுள் சங்கு எமது உடல்நல வளத்திற்கும் முக்கியமாகிறது. இதனை ஊதும்போது மூச்சுப்பயிற்சி இயற்கையாகவே வந்து விடுகிறது. இதயத்தில் இரத்த ஓட்டத்திற்கும் உதவி யாகிறது. ஒரு இசைக்கருவியாகவே கருதப்படுகிறது.

சங்கு சப்தம் தீய சக்திகளை விரட்டுகிறது. ஆலயங்களில் சங்கு, சேமக்கலம், மணி என்பன அசுர சக்திகளை இல்லாமல் செய்கின்றன. அத்துடன் ஆலய வைபவங்களில் சங்காபிசேகம் நடைபெறுவது வழக்கம். சங்கினில் பல்வேறு விதமான ஆயுள் மூலிகைகளை நீரினில் கலந்து பூஜித்து இறைவனுக்கு அபிஷேகம் செய்வார்கள் இவ்வேளை சங்கினில் அனைத்து தேவதைகளும் விரும்பி உறைவார்கள்என்ற நம்பிக்கையும் உண்டு சங்கின் நுனியில் கங்கை, சரஸ்வதியின் அருள் உண்டு, பின்பு அச்சங்கினால் தீர்த்தம் பெறும்போது ஆன்மீக பலனும், உடற்பலமும் பெருகுகிறது.

சங்கினில் வலம்புரி, இடம்புரி, பாஞ்சஜன்யம் எனப் பல வகை உண்டு. சங்கு என்பதே கடலில் வாழும் ஓர் உயிரினத்தின் ஓடு. அது றைவனால் வழங்கப்பட்டது. அவ் உயிரினங்களின் இறப்பிற்குப் பின் அச்சங்குகள் எடுக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. சில சங்குகள் பெரிதாக வளர்ந்து ஊதுவதற்கு ஏற்ற வகையில் அமையும்.

ஆலயங்களில் மட்டுமன்றி போர்க்களத்திலும் சங்கு ஊதப்பட்டதாக வரலாறுகள் உண்டு. இதனால் “சங்கே முழங்கு” என்று கூறப்படுவதையும் காணலாம் மற்றும் அத்திவாரம் இடும் போதுகூடச் சங்கினை வைப்பார்கள். ஒருவகையில் பூமிக்கு நன்றி சொல்வது போலவும் அதேவேளை கட்டிடம் அமையும் இடத்தில் இருக்கும் தீய சக்திகளைக் களையும் ஆற்றல் சங்கிற்கு உண்டு என்பதாலும் இவை பயன்படுத்தப் பட்டு வருகின்றன.

அட்டாலும் பால் சுவை குன்றாது என்னும் ஔவையாரின் மூதுரைப் பாடலில் சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்று சங்கின் மேன்மையைக் குறிக்கிறார்.அதாவது தானும் தூய்மையாக இருந்து தான் கஷ்டப்பட்டாலும் மற்றவர்களையும் தூய்மைப் படுத்தும் ஆற்றல் கொண்டது சங்கு. இதனை ஒவ்வொரு மனிதரும் உள்வாங்க வேண்டும் என்பதே சங்கின் ஒலி காட்டும் தத்துவம்.

கைகளில் கூட சங்கு ரேகை இருந்தால் நல்லது என்பார்கள். இவர்கள் உலகம் புகழும் பெரியவர் களாக இருப்பார்கள் எனக் கூறுவதும் உண்டு.

சங்கு பற்றிய குறிப்பு தமிழ் நூல்களிலும் சமய நூல்களிலும் நிறைய உண்டு. வைணவர்களுடைய வழிபாட்டில் விஷ்ணு சங்கு சக்கரத்தை தாங்கியுள்ளார் எனப் பார்க்கிறோம்” திருமுறைகளில் விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும் “மணிவாசகரும் கூவின கோழி என்னும் திருப்பள்ளியெழுச்சி பாடலில் “இயம்பின சங்கம்” என்பார். இங்கு இயம்பின் என்னும் போது பல விடயங்களைக் கூறுகின்றன எனப் பொருள் கொள்ளலாலம். இறைவனை நினையுங்கள், மற்றவர்க்கு மகிழ்ச்சி கொடுங்கள் தீமையை விலக்குங்கள் என்று பல தத்துவங்களைச் சங்கொலி தருகின்றது.

சங்கு இலட்சுமீகரமானது என்ற நம்பிக்கையும் உண்டு இதனால் பலர் வீடுகளில் சங்கிற்குள் காசு போட்டு வைப்பார்கள். “சங்குதரு நீணிதியம்” என சீவக சிந்தாமணி கூறும். நிதிகளிலே சங்க நிதி பத்ம நிதி என இருப்பதை தேவாரங்களும் கூறுகின்றன. இவை தொகையளவில் மிகப் பெரியன என்பதைக் குறிக்கிற சொல்லாடலாக இருந்துள்ளது.

எனவே சங்கானது அனைத்து இடங்களிலும் முக்கியத்துவப் படுத்தி சமயமும் தமிழர் பண்பாடும் போற்றி வருகின்றமை யைக் காணலாம்.



மங்கள வாழ்வினில் மாட்சிமை பெற்றிடும் சங்கி னைப் போற்று தல் நன்று.


AMAARA
JEWELLERY
உங்கள் இல்லத்தில் நிகழும் அனைத்து மங்கள நிகழ்வுகளிற்கும் பாரம்பரிய முறைப்படி தங்கநகை ஆபரணங்கள் செய்து தரப்படும்
தங்க நகை சேமிப்பு திட்டத்திலும் இணைந்து கொள்ளலாம்...
பழைய நகைகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்!
பழைய நகைகளைக் கொடுத்து உங்கள் விருப்பத்திற்கேற்ப புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்
020 7460 61 00 | 00 44 74 48 99 44 51
Amaaralondon info@amaarajewellery.co.uk
Amaara Jewellery 15, Ealing Road Wembley HA0 4AA

# அனுர குமாரவின் டெல்லி டயறியும்!.... சீனப்பயணக் குறிப்புகளும்!!









புத்தபெருமான் பரிநிர்வாணம்(ஞானம் )பெற்ற இடம் என்ற சிலாகிப்புக்கு உரிய புத்தகயாவின் தரிசனத்துடன் சிறிலங்கா அரசதலைவர் அனுரகுமார திசாநாயக்கா பெரிதும் எதிர்பார்க்கபட்ட இந்தியப்பயணத்தை முடித்து திரும்பி சில நாட்கள் கடந்து விட்டன.

இந்தியாவின் நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் இலங்கையை எந்த வகையிலும் பயன்படுத்த அனுமதிக்கப்போவதில்லை என்ற உறுதிமொழியை அவர் டெல்லிக்கு வழங்கியிருப்பதால் அனுரகுமாரவின் சீனப்பயணத்தில் என்ன இடம்பெறும் என்பது ஆர்வத்துக்கு உரிய விடயமாகியுள்ளது. அவரது சீனப்பயணத்தின் பெறுபேறுகள் கிட்டும்வரை அவரது இந்திய பயணத்தின் அதிர்வுகள் விட்டகுறை தொட்ட குறையாக தொடரவே செய்யும். இதைப்பற்றி எழுதப்படும் போது அனுரவின் சீனப்பயணத்துக்குரிய திகதி தீர்மானிப்பட்டிருக்கவில்லை. இதனால் இந்தபதிவை நீங்கள் வாசிக்குபோதும் அந்தப்பயணத்துக்குரிய திகதி அறிவிக்கப்பட்டிருந்தால் அதற்காக பொங்கல் காலத்தில் சீற்றத்தால் பொங்கக்கூடாது.

அனுரவின் சீனப்பயணத்துக்கு உரிய திகதி தீர்மானிக்கப்படவில்லை என்றாலும் இந்தப் பயணத்துக்குரிய அழைப்பு ஏற்கனவே கொழும்பில் உள்ள சீனத்தூதரால் திசாநாயக்கவுக்கு அதிகாரப்பூர்வமாக வழங்கப்பட்டு விட்டது.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் முரண்பாட்டை விதைப்பதற்கு இந்திய ஊடகங்கள் முயல்வதாக குற்றச்சாட்டுகள் தொடரும் பின்னணியில் இந்தியப்பெரியண்ணர் வீட்டுக்கான தனது பயணத்தில் அனுரகுமார கொடுப்பதைக்கொடுத்து வாங்குவதை வாங்கியிருப்பது தெரிகிறது.

இதன் அடிப்படையில் இந்தியாவுடன் தான் செய்துகொண்ட ஒப்பந்தங்களை இப்போது தனக்குப்பின்னால் அனுரகுமார ஏற்றுக்கொண்டது குறித்து முன்னாள் அரசதலைவர் ரணில் மகிழ்ந்தார்.

குறிப்பாக திருகோணமலையை இந்தியாவின் ஆளுமைக்கு வழங்கி இலங்கையின் கிழக்குப்பிராந்திய ஆற்றல் மற்றும் தொழிற்துறை கேந்திர நிலையமாக மாற்ற


BEAUTY COMPLEX EUROPE LTD
Rathi Shikakai
SHAMPOO
Hair Growth
Controls Hair fall
Improves Hair Texture
Promotes Faster Hair Growth
Detangles Hair
Slow down premature greying of Hair
Treats dandruff and reduces white flakes
Cleans scalp without affecting the natural PH
தலைமுடி வளர்சிக்கு உதவும்
தலைமுடி உதிர்வதைக் கட்டுப்படுத்தும்
தலைமுடியின் செழுமையை மேம்படுத்தும்
தலைமுடி விரைவாக வளர்வதை ஊக்குவிக்கும்
தலைமுடியைச் சிக்கலின்றி சீர்படுத்தும்
நரைமயிர் உருவாவதைத் தாமதப்படுத்தும்
பொடுகைத் தடுத்து செதில்கள் பரவாமல் காக்கும்
PH எனும் ஹைட்ரஜன் அயர்னுக்குப் பாதிப்பின்றித் தலையைச் சுத்தமாக்கும்.
MARKETING EXECUTIVE
BEAUTY COMPLEX EUROPE LTD
Unit 8 , Chandani Bazar 29 / 33 , Ealing Road
Wembley , Middlesex HA0 4YA, London , ( UK )
www.beautycomplex.co.uk info@mybeautycomplex.com
00 44 ( 0 ) 77 10 64 63 59
MARKETING EXECUTIVE
Subash European Ltd
1 , Rue Alfred Noble , 93600 Aulnay - sous - Bois, France
Tel : 00 33 65 28 27 303 / 00 33 66 96 67 571
MARKETING EXECUTIVE
TMT Asian food GMBH
Zen00 41 56 611 95 85 / 00 41 78 748 16 89
Tel : 00 41 56 611 95 85 / 00 41 78 748 16 89
ESAN BEAUTY COMPLEX
8887 , The Gore Road, Brampton, Ontario L6P 2K9
Canada
Tel - 90 59 15 25 15 | 416 45 02 515
E - Esancomplex8887@gmail.com
WWW.BEAUTYCOMPLEX.CO.UK



டெல்லியில் உடன்பட்ட அநுரகுமாரவை தான் பாராட்டுவதாகவும் அறிக்கையிட்டிருந்தார்.

ரணிலின் இந்தப்பாராட்டு உண்மையில் பாராட்டு அல்ல. மாறாக ஒரு காலத்தில் இந்திய எதிர்ப்பையே தமது முதன்மை அரசியல் மூலதனமாக்கிய ஜேவியின் தற்போதைய இந்திய விருப்பத்தை சிங்கள மக்களே அவதானித்துக் கொள்ளுங்கள் என்பதே இந்த செய்தி

அனுரகுமாரவை பொறுத்தவரை இந்தியாவின் அதானி குழுமம் குறித்து அமெரிக்கா உட்படட நாடுகளில் இருந்து வெளிப்படும் குற்றச்சாட்டுகள் குறித்துக்கவலையில்லை மாறாக இலங்கையில் அதானி குழுமம் என்ன செய்கிறது என்பதில் மட்டுமே தனது அரசாங்கத்தின் கவனம் இருக்கும் எனவும் தனது அரசாங்கம் புதிய புதிய இந்திய முதலீடுகளுக்கு இலங்கையை திறக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

அனுர குமாரவின் இந்த நிலைப்பாட்டுக்கு காரணங்கள் உள்ளன. இலங்கையில் அரசியல் ரீதியாக என்ன தான் தமது தரப்பு பலமாக நின்றாலும் பொருளாதார ரீதியாக இலங்கை பலவீனமான உள்ளதால் இந்தியா சீனா அமெரிக்கா என அனைத்துதரப்பின் ஆதரவையும் அவர் திரட்ட முனைப்பதால் இதனால் இனி அவர் மேற்கொள் ளும் சீனப்பயணத்தில் இன்னொரு சுருதியை அவர் ஒலிக்கவேண்டும்.

இந்த நிலையில் அனுரகுமார தனது இந்தியப் பயணத்தின் போது ஊடகங்களுக்கு வழங்கிய உரைகளில் இலங்கையின் இனப்பிரச்சனையை கச்சிதமாக தவிர்த்திருந்தாலும் அனுரவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களில் இலங்கையின் இனப்பிரச்சனை விடயமும் தொடப்பட்டது என்ற விடயத்தை இந்தியப்பிரதமர் சொல்லியிருந்தார்.

இலங்கையில் மாகாண சபைகளுக்கு 13வது திருத்தத்தின் கீழான அதிகாரங்களைப் பகிரவேண் டிய கடப்பாடு குறித்து தான் ஏகேடியாருக்கு எடுத்துரைத்தாக நரேந்திர மோடி தனது உரையில் சொல்லியிருக்கிறார். அத்துடன் இலங்கை மறு கட்டமைப்பு மற்றும் நல்லிணக்கம் (Reconstruction Reconciliation) குறித்து தாங்கள் இருவரும் பேசிய

**இலங்கையில் மாகாண சபைகளுக்கு 13வது திருத்தத்தின் கீழான அதிகாரங்களைப் பகிரவேண்டிய கடப்பாடு குறித்து தான் ஏகேடியாருக்கு எடுத்துரைத்தாக நரேந்திர மோடி தனது உரையில் சொல்லியிருக்கிறார்.**

போது அனுரகுமார திசாநாயக்க தன்னிடம் உள்ள முன்னகர்வுத்திட்டங்களை (Inclusive perspective)

தனக்கு விளக்கிக் கூறியதாக குறிப்பிட்டுள்ள மோடி அந்த திட்டங்கள் எவை எனப்பகிரங்கப் படுத்தாத நிலையில் தமிழ் மக்களின் அபிலாஷை களை அனுர அரசாங்கம் நிறைவேற்றும் என இந்தியா நம்புவதாகவும் குறிப்பிட்டிருந்தார் .

அத்துடன் சிறிலங்காவின் அரசியலமைப்பில் உள்ள விடயங்களை அதாவது 13 இன் முழுமையான நடைமுறையை செயல்படுத்துவதற்கு கொழும்பு தனது உறுதிப்பாட்டை நிறைவேற்றும் என்ற நப்பிக் கையும் மோடி மீண்டும் ஒரு முறை குறிப்பிட்டார்.

இந்த நிலையில் தமிழர்தாயக பகுதியில் வாழும் மக்கள் இந்தமுறை தமக்கு வாக்களித்திருப்பதால் அவர்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளித்து அவற்றுக்கு தீர்வுவழங்கவேண்டும் என்பதை அனுர குமார ஒப்புக்கொண்டுள்ளதாக டெல்லி ராஜதந் திரிகள் குறிப்பிட்டுள்ளனர். இலங்கை கடற்பரப் பில் வெளிநாட்டு ஆராய்ச்சிக்கப்பல்களுக்கு கடந்தவருடம் ரணில் அரசாங்கம் விதித்த தடை இந்தமாத முடிவுடன் (2025 ஜனவரி) முடிவடையும் நிலையில் இந்திய பாதுகாப்பு நலன்களை கொழும்பு சமரசம் செய்ய அனுமதிக்காதென அனுர குமார டெல்லிக்கு உறுதி மொழிவழங்கியிருப்பது அவரது சீனப்பயணத்தின் பின்னணியில் உள்ள ஒரு செக் மேற் விடயமாக மாறியுள்ளது.



சி.பிறேம்
ஊடக ஆய்வாளர்
பிரித்தானியா

# உங்கள் பிறந்த திகதியும் வாழவைக்கும் தெய்வங்களும்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | - | 10 | - | 19 | - | 28 |
| 2 | - | 11 | - | 20 | - | 29 |
| 3 | - | 12 | - | 21 | - | 30 |
| 4 | - | 13 | - | 22 | - | 31 |
| 5 | - | 14 | - | 23 | | |
| 6 | - | 15 | - | 24 | | |
| 7 | - | 16 | - | 25 | | |
| 8 | - | 17 | - | 26 | | |
| 9 | - | 18 | - | 27 | | |



**(இரட்டை எண்களைச் சேர்த்து கணக்கிடவும்)**

கடவுள் நம்பிக்கை உடையவர்கள்கூட சில சந்தர்ப்பங்களில் மனக் குழப்பம் அடைவதுண்டு. ஆனால் அப்படியான சந்தர்ப்பங்களில் அதே கடவுள் தோன்றி மனங்களை மாற்றி அவர்களுக்கு கருணை புரிவதையும் காண்கிறோம். இதற்கெல்லாம் நம்மைப் பாதுகாக்கும் தெய்வங்கள்தான் துணை நிற்கிறார்கள்.

மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்துவரும் எண்கணித சோதிடக்கலை ஒருவர் பிறந்த திகதிக்கமையவும், அவர் பிறக்கும்போது அவருக்குத் துணை நின்ற தெய்வம் பற்றியும் பட்டியலிட்டிருக்கிறது.

ஒருவருடைய பிறந்த நாளும் அதற்குரிய திகதியும் அவரது வாழ்க்கையின் எரிர்காலத்தை சக்தி வாய்ந்தமையாகவும், அதற்குரிய தெய்வம் துணை நிற்கும் எனவும், இந்துக்களின் தெய்வ நம்பிக்கை இதற்கு ஒரு உதாரணமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இங்கு ஒன்பது எண்களும் (தனியாகவும் கூட்டாகவுமான) அவற்றிற்கு தலைமை தாங்கும் தெய்வங்களும்



### 1 - 10 - 19 - 28 மகாவிஷ்ணு

இத் திகதிகளில் பிறந்தவர்கள் மகாவிஷ்ணுவின் தெய்வீகப் பார்வை, அனுக்கிரகம், கடாட்சத்தைப் பெற்றவர்கள். மக்களுக்கு ஆசி வழங்க மகாவிஷ்ணு பல அவதாரங்களை எடுத்தவர். இத்தேதிகளில் பிறந்தவர்களும் பிறருக்கு உதவிக்கரம் நீட்டி நல்லறிவை ஊட்ட முன்வருவார்கள்.



### 2 - 11 - 20 - 29 சிவபெருமான்

இவர்கள் சிவபெருமான் அருள் பெற்றவர்களாவர். அத்துடன் உணர்ச்சியும், மனஉறுதியும் உடயவராகவும், தீவிர பக்திமான்களாகவும், இறையருள் பெற்றவர்களாகவும், பிறர் மனங்களைப் புரிந்து கொள்ளக்கூடியவராகவும் இருப்பர்.



### 3 - 12 - 21 - 30 மகாவிஷ்ணு

இத்தேதிகளில் பிறந்தவர்கள் மகாவிக்ஷ்ணுவின் பார்வையிலேயே செயற்படுவார்கள். 3ம் திகதியில் பிறந்தவர்கள் மற்றத் திகதிகளில் பிறந்தவர்களிலும் பார்க்க மனமாற்றங்களுக்கு உரியவராகவும், எதையும் ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவம் உடையவராகவும் காணப்படுவர். இவர்கள் எதையும் ஆணித்தரமாகவும், நம்பிக்கையுடனும் தமது திறமைக்கு அமைய செயற்படுவார்கள். வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சனைகளை சமாளிப்பதிலும் சாமர்த்தியமாக இருப்பார்கள்.



**4 - 13 - 22 - 31 விநாயகர்**

இத்தேதிகளில் பிறந்தவர்களுக்கு விநாயகர் அனுக்கிரகத்தினால் மனப்பக்குவமும், மனத் தைரியமும் கிட்டும். இதன்படி அவர்கள் தம்மை எதிர்நோக்கி வரும் தடைகளையும், கஷ்டங்களையும் தாமாகவே கடந்து வருவர். இத்திகதிகளில் பிறந்தவர்கள் மிகவும் யதார்த்தமாகச் செயற்படுவர். கவர்ச்சியான பேச்சுவன்மை மிக்கவர்கள். தம்மை எதிர்நோக்கும் பிரச்சனைகளில் வெற்றிபெறுவர். எதிலும் பின்வாங்கமாட்டார்கள்.



**5 - 14 - 23 விநாயகர் - ஸ்ரீராமர்**

விநாகர் - ஸ்ரீராமர் இருவரதும் பார்வையில் உள்ளவர்கள். இத்திகதிகளில் பிறந்தவர்களின் வாழ்க்கை வெற்றிக்கு இவ்விரு தெய்வங்களின் கடாட்சமே துணை நிற்கும். இந்த எண்ணிற்கு உரியவர்கள் அமைதியான குணம் படைத்தவர்களாகவும், சிந்தனைச் செல்வம் உடையர்களாகவும், தார்மீக ரீதியில் இராம பிரானைப்போல் மேன்மையானவராக இருப்பர். விநாயகரைப்போல் தடைகளிலிருந்து தப்புவதற்கும் வல்லமை உடயவராவர்.



**6 - 15 - 24 மகாலட்சுமி**

செல்வத்திற்கு அதிபதியான மகாலட்சுமி கடாட்சமுடையவர்கள் இவர்கள். ஆரோக்கிய ரீதியாகவும், செல்வச் செழிப்புடையவர்களாகவும் விளங்குவர். இவரது அருள் பெற்றவர்கள் வாழ்க்கையில் செல்வச் சிறப்பும், அழகும், சாத்மீகமும் பெற்று வாழ்வார்கள்.



**7 - 16 - 25 விநாயகர்**

இந்தத் தேதிகளில் பிறந்தவர்களுக்கும் 4-13-22-31 பிந்தவர்களுக்கும் விநாயகரே அருள்பாலிக்கும் தெய்வமாவார். இந்த தேதிகளில் பிறந்தவர்கள் 4, 7 பிறந்தவர்களைப்போல விநாயகருடைய அருளைப் பெற்றவர்கள். இம்மூன்று திகதிகளில் பிறந்தவர்கள் விநாகருடைய கருணையிலும், கடாட்சத்திலும் பாதுகாக்கப்படுவார்கள். விக்ன கர்த்தாவாக இருக்கும் விநாயகருடைய பார்வையில உள்ளவர்கள் இயற்கையான தலைமைத்துவம் நிறைந்தவர்களாகவும், எதிர் நோக்கும் பிரச்சினைகளைச் சமாளிப்பவர்கள் மன நிம்மதியை விரும்புவர்களாகவும் இருப்பர



**8 - 17 - 26 சனி பகவான்**

இத்திகதியில் பிறந்தவர்கள் சனி பகவான் ஆட்சியில் பிறந்தவர்கள். சனி பகவான் விதியையும், நீதியையும் காப்பாற்றும் தெய்வமாவார். அத்துடன், சனி பகவான் ஒழுக்கத்தின் தாரதம்மியங்களையும், கர்மாவையும் கடைப்பிடிப்பவர். மக்களின் துன்பத்தையும்- துயரத்தையும் தாங்கிக் கொள்ளும் மனப்பான்மக்குத் துணைண நிற்பவர். சனி பகவான் கடாட்சத்தில் உள்ளவர்கள் கடின உழைப்பாளர்கள் ஆகவும், மனக் கட்டுப்பாடு நிறைந்தவர்களாகவும் இருப்பார்கள்.



**9 - 18 - 27 பக்த ஹனுமான்**

எண்கணித சோதிடத்தின்படி இத்தேதிகளில் பிறந்தவர்கள் பக்த ஹனுமானுடைய அனுக்கிரகம் பெற்றவர்களாவர். இவர்கள் மன உறுதியும், துணிவும், தன்னம்பிக்கையும், இறை நம்பிக்கையும் உடையவர் ஆவர். பக்த ஹனுமானுடைய நேர்மையும், நம்பிக்கையும், மன உறுதியும் இவர்களிடம் காணப்படும். வாழ்க்கையில் எதிர் நோக்கக் கூடிய கஷ்டங்களை எல்லாம் தவிர்க்கக் கூடிய சக்தியும், மனத்தைரியமும் பெறுவதற்கும், நேர்வழியில் செல்வதற்கும் பக்த ஹனுமான் வழி நடத்துகிறார்.



# கனடாவில் அகதி அந்தஸ்து கோரும் மாணவர்கள்

## கனடிய தமிழர் தகவல் ஆசிரியர் திருச்செல்வம் தரும் விபரமான விளக்கம்



பத்திரிகைத் துறையில் அனுபவம்மிக்க திரு. திருச்செல்வம் அவர்கள் ஆதாரபூர்வமாகவும், ஆய்வு செய்தும் எழுதுவதில் வல்லமை உடையவர். கனடாவில் வாழும் தமிழர்களின் தமிழ்ப் பசிக்கு "கனடிய தமிழர் தகவல்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக இருந்து மாதாமாதம் தமிழ்ப் பாலை பருகவைப்பவர்.

கனடாவில் தமிழ் மாணவர்கள் பெருமளவில் இருப்பதால் தமிழர்கள் இக் கட்டுரையைப் படித்து ஆவன செய்வார்களாக.

திரு அவர்களின் கனடிய தமிழ் மாணவர்கள் பற்றிய அவரது படைப்பை "சீமைக் குரல்" வெளியிடுவதில் மகழ்ச்சி அடைகிறது - **ஆசிரியர்.**

கனடிய குடிவரவு சட்டத்தில் பல அதிரடி மாற்றங்களை குடிவரவுத்துறை அமைச்சர் மார்க் மில்லர் அறிவித்துள்ளார். முக்கியமாக வேலை வாய்ப்பு ஊடாக நிரந்தர குடிவரவாளராக வர முனைபவர்கள் சமர்ப்பிக்கும் போலியான வேலை வாய்ப்பு கடிதங்களை கண்டுபிடித்து சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அறிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை புலம்பெயர்ந்து வருபவர்கள் பல நன்மைகளை இழக்க நேரிட வைக்கும் எனவும் அமைச்சர் எச்சரித்துள்ளார். கல்விச் சாதனைகள் மற்றும் துறைசார் பணி அனுபவங் களுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டு வருகிறது. கனடாவில் தொழிலாளர் சந்தை மதிப்பீட்டுக்கு மேலதிக போனஸ் புள்ளிகள் வழங்கப்படுகிறது. டுஆஜயு என அழைக்கப்படும் தொழில் சந்தைக்கான புள்ளி மோசடி முறையில் பெறப்படின் அது இழக்கப்படுவதோடு சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரி தமக்கான கனடிய நுழைவு அனுமதியையும் இழப்பவராவார்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவானதையடுத்து, இரண்டு நாடுகளுக்கு - மிடையேயான அகதிகள் போக்குவரத்தில் கனடிய அரசு அதீத கரிசனை கொள்ள நேர்ந்து உள்ளது. முக்கியமாக, கியுபெக்கின் கிராமப்புறம் ஊடாக மேற்கொள்ளப்படும் 'போக்குவரத்து" பிரச்சனையாக மாறியுள்ளது.

ஒழுங்கற்ற குடியேறிகள் என்று அமெரிக்கா குறிப்பிடுபவர்களையிட்டு கனடா சில நடவடிக்கைகளை எடுக்க நேர்ந்துள்ளது. கனடாவில் இரண்டரை லட்சம் வரையான அகதிக் கோரிக்கைகளை ஒழுங்குபடுத்த கனடிய அரசு ஏற்கனவே எடுத்த நடவடிக்கை தோல்விய - டைந்ததை அமைச்சர் மில்லர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய அகதி ஒருவர் கனடாவுக்கு வந்து ஒரு வருடத்துக்குள் புகலிடம் கோருவதற்கானதில் மாற்றம் கொண்டு வரப்படலாமென்று கூறப்படுகிறது. இதன் எதிரொலியாக, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான புதிய குடிவரவாளர் எண்ணிக்கை இலக்கை குறைக்கவும் ஆலோசிக்கப்படுகிறது. இதனால் வீடு விற்பனை விலை அதிகரிப்பு, குடியிருப்பு வாடகை அதிகரிப்பு ஆகியவைகளை ஓரளவுக்காவது குறைக்கலாமென்றும் கனடிய மத்திய அரசு எதிர்பார்க்கிறது.

குடிவரவுத்துறையில் பல மாற்றங்களை நோக்கி கனடிய அரசு முன்னேறிக் கொண்டிருக்கை - யில், ஒன்ராறியோ மாகாண அரசும் முக்கிய அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. இங்கு வரும் புதிய குடிவரவாளர்களை ஏமாற்றி மோசடி செய்யும் சட்டபூர்வமற்ற குடிவரவு ஆலோசகர்கள் எனப்படுபவர்கள் மற்றும் இது தொடர்பான படிவங்களை நிரப்புபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்டத்தை அறிமுகப்படுத்தப் போவதாக ஒன்ராறியோ குடிவரவு அமைச்சர் டேவிட் பிசினி அறிவித்துள்ளார்.

பாதிக்கப்படக்கூடிய புதியவர்களை சுரண்டுவது, அவர்களின் சேமிப்பிலிருந்து மோசடி செய்வது, போலியான வேலை ஏற்பு கடிதங்களை வழங்குவது, போலி ஆவணங்கள் உருவாக்க அவர்களை கட்டாயப்படுத்துவது என்பவற்றில் ஈடுபடும் "மோசமான நடிகர்கள்" இங்கு இருப்பதை நாங்கள் அறிவோம் என்று அறிவித்துள்ள ஒன்ராறியோ மாகாண அரசு, அடுத்துவரும் சில வாரங்களில் குடியேற்ற முறையை வழிநடத்தும் மற்றும் மோசடி சுரண்டல்களைத் தடை செய்யும் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தப் போவதாக தெரிவித்துள்ளது.

# சிறிலங்கா பிரதமர் ஹறிணி அமரசூரிய

## அன்று சாமானியப்பெண் இன்று சாதனைப்பெண்!



சயந்தினி சிவலிங்கம்
இலண்டன்

சிறிலங்காவில் அரசதலைவர் தேர்தலில் அனுரகுமார திசாநாயக்கா வெற்றிபெற்ற பின்னர் புதிய பிரதமராக நியமிக்கப்பட்ட ஹறிணி அமரசூரிய நாடாளுமன்றத்தேர்தலுக்கு பின்னரும் பிரதமராக தொடர்கின்றார்.

ஹறணி அப்போதும் சரி இப்போதும் சரி ஒரு பரபரப்பான பெண்மணியாகவே உலாவருகிறார்.

சிறிலங்காவில் என்ன பாரம்பரியமோ தெரியவில்லை ஏறக்குறைய ஒவ்வொரு 30 வருட சுழற்சியில் ஒரு முறை மட்டுமே ஒரு பெண் பிரதமர் தெரிவுசெய்யப்படுகிறார். அந்தவகையில் மீண்டும் ஒரு சுழற்சி வந்து 3வது பெண் பிரதமர் என்ற பெருமையை ஹறிணி அமரசூரிய பெற்றிருக்கிறார்.

உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பதிவு முதலில் சிறிமாவுக்கு கிட்டியது அதன் பின்னர் அவரது புதல்வியான சந்திரிக்காவுக்கு 1990 களில் கிட்டியது.

அன்னையும் புதல்வியும் தத்தமது வாழ்கைத்துணைவர்களான பண்டாரநாயக்காவும், விஜயகுமாரதுங்கவும் படுகொலை செய்யப்பட்ட பின்னர் அந்தபொறுப்புக்கு ஒருவித அனுதாபத்துடன் வந்திருந்தனர். ஆனால் ஹறிணி அமரசூரிய எந்தவிதமான அனுதாபப் பின்னணிகளும் இல்லாமல் அவரது ஆளுமைக்காக இந்தப்பதவியில் அமர்த்தபட்டுள்ளார்.

அரசியல் பின்புலம் ஏதும் இவருக்கு இல்லை.

தென் பகுதியை சேர்ந்த சாதாரண தோட்டத் தொழிலாளியின் மகளான இவர் 1970 ஆண்டில் கொழும்பில் பிறந்து கல்வி என்ற முதலீட்டை முன்வைத்து 2019இல் தேசிய மக்கள் சக்தியில் இணைந்த இவர் 2020 இல் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற அரசியலுக்குள் நுழைந்து இப்போது பிரதமர் அரியணையில் அமர்ந்ததும் சுவாரசியமானது.

திறந்த பல்கலைக்கழகத்தில் சமூகவியல்துறை விரிவுரையாளராகவும் பணியாற்றிய ஹறிணியின் பார்வை கொஞ்சம் கொஞ்சமாக அரசியல் பக்கம் திரும்ப தொடங்க ஆசிரியர் சங்கம் உட்பட சில முக்கிய பொறுப்புகளை ஏற்றார்.

> **உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பதிவு முதலில் சிறிமாவுக்கு கிட்டியது அதன் பின்னர் அவரது புதல்வியான சந்திரிக்காவுக்கு 90 களில் கிட்டியது.**

இலங்கை அரசியலில் வெற்றியை தீர்மானிப்பது அந்ததீவில் வாழும் 52 சதவீத பெண்கள் என்பதை நன்கு உணர்ந்த ஹறிணி இலங்கையில் மட்டுமல்ல தெற்காசியாவில், எந்த ஒரு அரசியல் குடும்பப்பின்னணியும் இல்லாமல் பிரதமரான முதல் பெண் என்ற இன்னொரு பதிவையும் பெற்றுள்ளார்.

அதுவும் ஜேவிபி சார்ந்த அனுரகுமார திசாநாயக்கா பிரதமர் பொறுப்பையும் இன்னொரு ஜேவிபி முகத்திடம் ஒப்படைக்காமல் திசைகாட்டி அணியில் இருந்து ஹறிணியை புத்திசாலித்தனமாக நியமித்து கடந்த பொதுத்தேர்தலில் மூன்றில்



Herbul Black Henna
இங்கிலாந்து, ஐரோப்பா, சுவிற்சர்லாந்து மற்றும் கனடா மக்களுக்கு ஓர் நற்செய்தி
Herbul
Black Henna
UK COMPLIANT
EXPORT QUALITY
The safest way to colour hair
Pure, Rich, Natural Cultivated Henna
AMMONIA FREE
HERBUL BLACK HENNA வின் புகழைப் பயன்படுத்தி போலிகள் சந்தையில் வந்துள்ளன.
இயற்கை மூலிகையிலும், மருதோண்டி இலைகள் கொண்டு தயார் ஆன Herbul Black Henna இப்போது புதிய வடிவிலான பாக்கட்டுகளில் வந்துள்ளன.
Original Herbul Black Henna வாங்கும் போது Beauty Complex Europe Ltd முத்திரையும், இங்கிலாந்து மற்றும் ஐரோப்பா அரசாங்கத்தில் அங்கிகாரம் பெற்ற முத்திரையும் உள்ளதா என கவனித்து வாங்கவும் போலிகளை வாங்கி ஏமாறதீர்கள்...
The Safest Way To Colour Hair
Beauty Complex Europe Ltd is Authorised as an importer & Distributor for the United Kingdom
UK Regulation 2009 / 1223 and the Cosmetic Products Enforcement Regulations 2013
MARKETING EXECUTIVE
BEAUTY COMPLEX EUROPE LTD
Wembley, Middlesex HA0 4YA, London, ( UK )
www.beautycomplex.co.uk info@mybeautycomplex.com
MARKETING EXECUTIVE
Tel : 00 33 65 20 27 303 / 00 33 66 96 67 571
MARKETING EXECUTIVE
Tel : 00 41 56 611 95 85 / 00 41 78 740 16 09
ESAN BEAUTY COMPLEX
Canada
WWW.BEAUTYCOMPLEX.CO.UK



இரண்டு பெரும்பான்மைக்கு அப்பால் ஒரு வெற்றியை பெற்றுக்கொண்டார்.

ஹரிணி அமரசூரிய வழமையான ஒரு இலங்கைப் பெண்ணை பிரதிநிதித்துவம் செய்யவில்லை என்ற விமர்சனங்கள் இருந்தாலும் அவர் ஒரு கண்ணியமான பகுத்தறிவுக் குரலாகவே நோக்கப்படுகிறது .

சிறிலங்காவை பொறுத்தவரை பொதுவாக ஒய்வு பெறக் காத்திருக்கும் வயதான அரசியல்வாதிகளே பிரதமராக நியமிக்கபபடுவது வழமை. சந்திரிகா மற்றும் ரணில் இதில் விதிவிலக்காக இருந்த நிலையில் இப்பொழுதுதான் ஒப்பீட்டு ரீதியில் துடிப்பான ஒரு கலாநிதிப் பெண் பிரதமராக கிட்டியுள்ளார்.

இனிவரும் காலத்தில் அனுர திசாநாயக்க தனது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிம்மதியாக ஆட்சி செய்ய முடியுமா என்பதை ஹரிணியின் பொறுப்பும் தீர்மானித்துக்கொள்ளும் என்பதும் ஒரு முக்கிய விடயம்.

கலாநிதி ஹரிணி அமரசூரிய டெல்லி பல்கலைக்கழகத்தில் இந்துசமூகப்பிரிவில் சமூகவியலும்,அவுஸ்திரேலியாவின் மக்குவாரி பல்கலைக்கழகத்தில் மானிடவியலும் படித்திருக்கிறார். இலங்கை திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் சமூக அறிவியல் பிரிவில் விரிவுரையாளராக பணியாற்றி இருக்கிறார்.


சமூக நலன், எய்ட்ஸ் விழிப்புணர்வு மற்றும் குழந்தைகள் நலன் ஆகிய துறைகளில் ஆர்வலராக இருந்திருக்கிறார். மேலும், அவர் இலங்கையில் உள்ள சமூக சுகாதார தளமான நேளவ- என்ற அமைப்பின் இயக்குநராகவும், தலைவராகவும் பதவி வகித்திருக்கிறார்.

அநுரகுமரவை சிறிலங்காவின் அரசதலைவராக வெற்றி பெறவைக்க இலங்கை முழுவதும் பல கிலோ மீற்றர் பயணம் செய்து அனல் பறக்க பேசினார்.முன்னைய ஆட்சியாளர்கள் தமது பணம், செல்வாக்குடன் ஆட்சியில் இருந்தாலும் மக்கள் தமது பக்கமே என முழங்கிய படி தனது அரசியல் பயணத்தை தொடர்கிறார்.




BEAUTY COMPLEX EUROPE LTD
Desyham
Hair Darkening Shampoo
The safest way to color Hair
முதல் முறையாக பிரித்தானிய மற்றும் ஐரோப்பிய தர சான்றிதழுடன் Japan தொழில் நுட்பத்தில் Noni மற்றும் Olive மூலிகையுடன் தயாரன Shampoo வடிவில் ஓர் Hair Dye
பிரஷ் அவசியம் இல்லை 5 நிமிடத்தில் கருமை நிறம் ஊட்டும் Desyham Hair Darkening Shampoo
5 MINUTE HAIR COLOR
UK & EU
AMMONIA FREE
Couleur des cheveux - Noir
Haarfarbe - Schwarz
Haarkleur - Zwart
Hårfarve - Sort
DESYHAM
HAIR DARKENING SHAMPOO
பிரித்தானிய மற்றும் ஐரோப்பா எங்கும் பரப்பரப்பாக விற்பனையாகின்றது
UK Regulation 2009 / 1223 & the Cosmetic Products Enforcement Regulations 2013
Beauty Complex Europe Ltd
est autorisé en tant qu'importateur et Distributeur
pour la région EU.
EU
MARKETING EXECUTIVE
BEAUTY COMPLEX EUROPE LTD
Unit 8 , Chandani Bazar 29 / 33 , Ealing Road
Wembley , Middlesex HA0 4YA, London , ( UK )
www.beautycomplex.co.uk info@mybeautycomplex.com
00 44 ( 0 ) 77 10 64 63 59
MARKETING EXECUTIVE
Subash European Ltd
1 . Rue Alfred Nobile , 93600 Aulnay - sous - Bois, France
Tel : 00 33 65 28 27 303 / 00 33 66 96 67 571
MARKETING EXECUTIVE
TMT Asian food GMBH
Zen00 41 56 611 95 85 / 00 41 78 748 16 89
Tel : 00 41 56 611 95 85 / 00 41 78 748 16 89
ESAN BEAUTY COMPLEX
8807 , The Gore Road, Brampton, Ontario L6P 2K9
Canada
Tel - 90 59 15 25 15 | 416 45 02 515
E - Esancomplex8887@gmail.com
WWW.BEAUTYCOMPLEX.CO.UK

# டொனால்ட் ட்ரம்ப் சர்ச்சைகளிலிருந்து அதிகாரத்துக்கு..!



ஐங்கரன்
சீமைக் குரல்
இலங்கை நிருபர்

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக எதிர்வரும் ஜனவரி 20ஆம் திகதி பதவியேற்கிறார் டொனால்ட் ட்ரம்ப். இது அவரின் இரண்டாவது பதவிக் காலமாகும். அமெரிக்க ஜனாதிபதியாக இருந்து இரண்டாவது பதவிக்கான தேர்தலில் தோல்வியடைந்து மூன்றாவது தேர்தலில் அதிகாரத்தை பெற்றவர்களின் வரிசையில் ட்ரம்புக்கு இரண்டாவது இடம். இந்த நூற்றாண்டில் இதுவே முதல் சந்தர்ப்பம்.

அமெரிக்க ஜனாதிபதியாக முன்னர் பதிவ வகித்த ட்ரம்ப் சர்ச்சைகள் - விமர்சனங்களுக்கு பிரபலமானவர். இதேபோல, பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கும் உள்ளானவர். தனது சர்ச்சைகள் மற்றும் செயல்களை தனது அடையாளமாக்கி அதன் மூலம் தன்னை பிரபலப்படுத்தி அதிகாரத்தை வென்றவர் என்றால் அது ட்ரம்ப் என்று சொன்னால் மிகையல்ல.

**யார் இந்த ட்ரம்ப்?**



அமெரிக்காவின் புகழ்பெற்ற கட்டுமான நிறுவனமான நியூயோர்க் ரியல் எஸ்டேட்டின் நிறுவுநர் பிரட் ட்ரம்ப். இவரின் நான்காவது மகனே டொனால்ட் ட்ரம்ப். பெரும் பணக்கார குடும்பத்தில் பிறந்த அவர் 13ஆவது வயதிலேயே சர்ச்சையில் சிக்கிக் கொண்டார். இதனால், பாடசாலையிலிருந்து விலக்கப்பட்டார். எனவே, அவரின் குடும்பத்தவர்கள் அவரை இராணுவ கல்லூரியில் சேர்ப்பித்தனர். அங்கு கல்வி கற்ற அவர் பின்னர், பென்சில்வேனிய பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்தார்.

டொனால்ட் தந்தையின் தொழிலை முன்னெடுக்க வேண்டும் என்று அவரின் குடும்பத்தவர்கள் விரும்பினர். இதனால், அவர் ரியல் எஸ்டேட் தொழில்துறைக்குள் நுழைந்தார்.

டொனால்ட் ட்ரம்பின் மூத்த சகோரர் அதீத மதுப்பழக்கத்தால் உயிரிழந்தார். இதனால், டொனால்ட் மது, சிகரெட் போன்ற பழக்கங்களை கைவிட்டார் - வெறுத்தார். இதனால், அவர் மது - புகை பழக்கங்களை இன்றளவும் தவிர்த்தே வருகிறார்.

**வணிக சாம்ராச்சியம்**



தந்தையின் தொழிலை முன்னெடுத்த டொனால்ட் ட்ரம்ப் அந்த நிறுவனத்தை நடத்துவதற்கு முன்னர் 10 இலட்சம் டொலரை தந்தையிடம் கடனாக பெற்றார். அந்தப் பணத்தைக் கொண்டு கட்டுமான தொழில்துறையில் கால் பதித்தார். 1971ஆம் ஆண்டு தந்தையின் நிறுவனத்தின் தலைமை பொறுப்பையும் ஏற்றார். அதன் பின்னர், அந்த நிறுவனத்துக்கு ட்ரம்ப் என்ற தனது குடும்பப் பெயரை சூட்டினார்.

தொடர்ந்து, ட்ரம்ப் ரவர் என்ற குடியிருப்பை தனக்காக உருவாக்கினார். அத்துடன், ட்ரம்ப் என்ற பெயரை அடையாளமாக வைத்து கட்டுமானத்தொழிலுடன் ஹோட்டல்கள், கோல்ப் மைதானங்கள், ஆடை நிறுவனங்கள் எனப் பலவற்றை உருவாக்கினார். அவர் தனது வியாபார சாம்ராச்சியத்தை இந்தியா, பிலிப்பைன்ஸ், அட்லாண்டிக் சிற்றி, லாஸ்வேகாஸ் போன்ற இடங்களில் பரந்து விரிவடையச் செய்தார்.

பொழுதுபோக்கு துறையிலும் கால் பதித்த ட்ரம்ப் திரைப்படங்கள், டபிள்யூ டபிள்யூ ஈ குத்துச்




MARKETING EXECUTIVE

BEAUTY COMPLEX EUROPE LTD
Unit 8, Chandani Bazar 29 / 33, Ealing Road
Wembley, Middlesex HA0 4YA, London, ( UK )
www.beautycomplex.co.uk info@mybeautycomplex.com
00 44 ( 0 ) 77 10 64 63 59

MARKETING EXECUTIVE
Sabash European Ltd
1, Rue Alfred Noble, 93600 Aulnay - sous - Bois, France
Tel : 00 33 65 28 27 303 / 00 33 66 96 67 571

MARKETING EXECUTIVE
TMT Asian food GMBH
Zeu00 41 56 611 95 85 / 00 41 78 748 16 89
Tel : 00 41 56 611 95 85 / 00 41 78 748 16 89

ESAN BEAUTY COMPLEX
8887, The Gore Road, Brampton, Ontario L6P 2K9
Canada
Tel - 90 59 15 25 15 | 416 45 02 515
E - Esancomplex8887@gmail.com

சண்டை போட்டிகள், அழகி போட்டிகளையும் நடத்தும் அங்கீகாரத்தையும் பெற்றார். உலக அழகி போட்டிகள், அமெரிக்க அழகி போட்டிகளை இவரே நடத்தினார். போர்ப்ஸின் கணிப்பின்படி இவரின் தற்போதைய சொத்து நிகர மதிப்பு 400 கோடி டொலர்களாகும்.

வியாபார சாம்ராச்சியத்தில் தனக்கென ஓரிடத்தை ட்ரம்ப் தக்கவைத்தபோதும் 6 தடவைகள் தான் வங்குரோத்து அடைந்துவிட்டதாக அறிவிப்புகளை வெளியிட்டார். அவரின் பல வணிக முயற்சிகள் தோல்வியை சந்தித்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**திருமணங்களும் குற்றச்சாட்டுகளும்**





டொனால்ட் ட்ரம்ப் 3 திருமணங்கள் செய்துள்ளார். இவரின் முதல் மனைவி இவானா ஜெஸ்ரிகோவா. இவர் மொடல் மற்றும் விளையாட்டு வீராங்கனையாவர். இவர்களுக்கு 3 பிள்ளைகள் உள்ளனர். ட்ரம்ப் தன்னை பல்வேறு சந்தர்ப்பங்களில் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தினார் என்று இவானா குற்றச்சாட்டுகளை சுமத்தியிருந்தார்.

1990இல் இவானாவை பிரிந்த ட்ரம்ப் மார்லா மத்தியூஸூடன் காதல் உறவில் இருந்தார். இவர்களுக்கு குழந்தை பிறந்ததைத் தொடர்ந்து இருவரும் 1993இல் மணவாழ்வில் இணைந்தனர். எனினும் இருவரின் மணவாழ்வும் 6 ஆண்டுகளே நீடித்தது.

தற்போது மெலினாவுடன் வாழ்ந்து வரும் ட்ரம்ப் 2005இல் அவரை மணந்தார். இருவருக்கும் ஒரு மகன் உள்ளார். மூன்று திருமணங்களை ட்ரம்ப் செய்தாலும் திருமணத்துக்கு புறம்பாக அவருக்கு தொடர்புகள் இருந்தன என்றும் பாலியல் அத்துமீறல்களில் ஈடுபட்டார் எனவும் அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டுள்ளன.

எழுத்தாளர் ஈ. ஜி. கரோலின், பாலியல் திரைப் பட நடிகை ஸ்ரார்னி டானியல் ஆகியோர் ட்ரம்புக்கு எதிராக பாலியல் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர். இவை தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்குகளும் நிலுவையில் உள்ளன.

**விரும்பாத அரசியலில்**

"திறமைசாலிகள் அரசியலை தெரிவு செய்வதில்லை" - டொனால்ட் ட்ரம்பின் ஆரம்பகால கொள்கையாகும். எனினும் திருப்புமுனையாக 2000ஆம் ஆண்டில் குடியரசுக் கட்சியில் இணைந்தார். பராக் ஒபாமா அமெரிக்காவில் பிறந்தவரல்லர் என்ற சதிக் கோட்பாட்டை 2012இல் முன்வைத்தவர்களில் ட்ரம்பும் ஒருவர். 2016 வரை தான் கூறியமை பொய் என்று அவர் ஏற்கவில்லை.

2015 ஜூனில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்தார். அப்போது, "அமெரிக்கர்களின் கனவை மீண்டும் பெரிதாகவும் சிறப்பாகவும் கொண்டு வருவேன்", என்று கூறினார். கருத்து கணிப்புகள் அவர் வெல்வது கடினம் என்றே கூறின. ஆனால், அந்த கணிப்புகளை பொய்யாக்கி தேர்தலில் வென்று 2017 ஜனவரி 20இல் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், உலக நாடுகளின் தலைவர்களுடன் நேரடியாக மோதினார். முக்கியத்துவம்மிக்க ஒப்பந்தங்களான பருவநிலை மாற்றம் மற்றும் வர்த்தக உடன்படிக்கைகளில் இருந்து வெளியேறினார். முஸ்லிம்கள் அதிகம் வாழும் 7 நாடுகளுக்கு பயணத் தடை விதித்தார். அமெரிக்கா அமெரிக்கர்களுக்கு மட்டுமே என்ற அவரின் கோஷத்தால் குடியேற்ற கட்டுப்பாடுகளை கடுமையாக்கினார். இதனால், விரைவிலேயே அவர் மீது நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டது. ஆனால், அதில் ட்ரம்பே வெற்றி பெற்றார்.

கோவிட் பெருந்தொற்று சமயத்தில் இரண்டாவது பதவிக் காலத்துக்காக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது. 70 இலட்சம் வாக்குகளால் ஜோ பைடனிடம் தோல்வியடைந்தார். தோல்வியை ஏற்க மறுத்த அவர் பல குற்றச்சாட்டுகளை சுமத்தினார். தனக்கு ஆதரவாக 2020 ஜனவரி 6ஆம் திகதி வாஷிங்டனில் மக்களை திரட்டினார். இந்தப் பேரணி கலவரத்தில் முடிந்தது. அமெரிக்கா கடந்த காலங்களில் சந்திக்காத மாபெரும் கறையை சந்தித்தது. இதனால், ட்ரம்புக்கு நிதி அளித்தவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அவருக்கான ஆதரவை விலக்கிக் கொண்டனர். இதனால், அவரின் அரசியல் வாழ்வு முடிவுக்கு வந்துவிட்டதாகவே பலரும் தெரிவித்தனர்.

மீண்டும் தடைகளை தகர்த்து குடியரசுக் கட்சியின் வேட்பாளரானார். அத்துடன், தேர்தலிலும் வென்று அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக பொறுப்பேற்கவுள்ளார்.



NuZen
GOLD
Herbal Hair Oil
BEAUTY COMPLEX EUROPE LTD
Helps to generate new Hair
Prevents Hair Fall
Dandruff control
Treats split ends
Strengthens the roots
Ancient formula
Cures scalp infections
புதிய முடியை உருவாக்க உதவுகிறது
முடி உதிர்வைத் தடுக்கும்
பருக்களை கட்டுப்படுத்தும்
உடைவுகளைக் குணமாக்கும்
முடி வேர் வலிமையாக்கும்
பாரம்பரிய மூலிகை சிகிச்சை
தலையில் உள்ள தோல் தொற்றுகளை குணமாக்கும்
NuZen GOLD Herbal Hair Oil
எலுமிச்சை
Lemon
நெல்லிக்காய்
Amla
தாலிசப் பத்ரி
Japa Patra
கரிசலாங்கண்ணி
Bhringraj
தேங்காய்
Coconut
செம்பருத்தி
Hibiscus
வெந்தயம்
Fenugreek
பாதாம்
Almonds
EXPORT QUALITY
MARKETING EXECUTIVE
BEAUTY COMPLEX EUROPE LTD
Unit 8, Chandani Bazar 29 / 33, Ealing Road
Wembley, Middlesex HA0 4YA, London, ( UK )
00 44 ( 0 ) 77 10 64 63 59
MARKETING EXECUTIVE
Subash European Ltd
1, Rue Alfred Noble, 93600 Aulnay - sous - Bois, France
MARKETING EXECUTIVE
TMT Asian food GMBH
ESAN BEAUTY COMPLEX
Canada



# மனைவியின் மகிழ்ச்சி எங்கே இருக்கிறது தெரியுமா?

சபீதா திருத்தணீசன் BA
ஆசிரியர்
(MTA middle six Tamil academy) London

ஒரு பெண்ணிற்கு உலகில் எவ்வளவு மகிழ்ச்சி கிடைத்தாலும் அவள் தேடும் மகிழ்ச்சி அவள் கணவனின் அன்பு மட்டுமே. ஒரு பெண்ணிற்கு மூன்று வேளை உணவும் உடுக்க உடையும் கொடுத்தல் போதும் அவள் வாழ்க்கைக்கு என்று சில கணவன்மார்களின் எண்ணம்.

ஆனால் இவை அனைத்தும் இல்லாமல் ஒரு பெண்ணாமல் வாழ முடியும் ஆனால் கணவனின் அன்பு இல்லாமல் அவளால் வாழமுடியாது. உங்கள் மனைவியின் ஒருசில தவறுகளை அடிக்கடி சுட்டிக்காட்டாமல் அவளின் நல்ல செயல்களில் ஒன்றையாவது சொல்லிக்காட்டுங்கள்.

அதுவே அவளை வாழவைக்கும். தனது சொந்தபந்தங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு உங்களையே உலகமென எண்ணும் அவளை உலகமாக எண்ணாவிட்டாலும் ஒரு உயிராக எண்ணுங்கள்.

பெண்ணியம் (feminism) என்பது பெண்களை தாழ்வுபடுத்தும் சமூக, அரசியல், பொருளாதார நடைமுறைகள், கட்டமைப்புக்கள் மற்றும் சமத்துவமின்மையை எதிர்க்கும் சமூக, கலாசார, அரசியல் இயக்கங்கள், செயற்பாடுகள்,

**பெண்கள் பெண்ணியம் பேசுகிறார்கள் என்று குற்றம் கூறுவதை விட்டுவிட்டு அவளுக்கான அடிப்படை உரிமைகள் நீங்கள் வாழும் வீடுகளில் கொடுக்கப்படுகிறதா என்று சிந்தித்து பாருங்கள்.**


FAIRNEX CREAM
for Amazing Face
BEAUTY COMPLEX EUROPE LTD
For your LOVELY FACE to become the exciting face of YOUR DREAMS!
எண்ணம் போல் வண்ண முகம் எழில் பெற...
முற்றிலும் உண்மை! முகமே சொல்லும்...
FAIRNEX
Lovely Look Skin
3 in one
Fairnex cream for amazing Face for your Lovely Face
To become the Exciting Face of your dreams
Rich Treatments for Younger Looking Skin
நாள் முழுவதும் சருமத்தை மெருகோடு புத்துணர்ச்சியும், புதுப்பொலிவும் துலங்க பனிமலர் போல் வாடாமல் வைத்திருக்கும். முகப்பருக்களை, கரும்புள்ளிகளை முற்றாக நீக்கும் முழுச்சக்தி வாய்ந்தது.
MARKETING EXECUTIVE
BEAUTY COMPLEX EUROPE LTD
Unit 8 , Chandani Bazar 29 / 33 , Ealing Road
Wembley , Middlesex HA0 4YA, London , ( UK )
www.beautycomplex.co.uk info@mybeautycomplex.com
00 44 ( 0 ) 77 10 64 63 59
MARKETING EXECUTIVE
Subash European Ltd
1 , Rue Alfred Noble , 93600 Aulnay - sous - Bois, France
Tel : 00 33 65 28 27 303 / 00 33 66 96 67 571
MARKETING EXECUTIVE
TMT Asian food GMBH
Zen00 41 56 611 95 85 / 00 41 78 748 16 89
Tel : 00 41 56 611 95 85 / 00 41 78 748 16 89
ESAN BEAUTY COMPLEX
8887 , The Gore Road, Brampton, Ontario L6P 2K9
Canada
Tel - 90 59 15 25 15 | 416 45 02 515
E - Esancomplex8887@gmail.com



கோட்பாடுகளின் தொகுப்பாகும்.

சாதரணமாக ஒரு பெண் தான் விரும்பும் ஒரு செயலை யாருடைய தலையீடும் இன்றி செய்வதிலேயே அவளின் சுதந்திரம் தொடங்குகின்றது.

இன்று அவளுக்கான சுதந்திரம் என்பது இறக்கை வெட்டபட்ட பறவை போலவே . “பறக்க விட்டுவிட்டேன் பறந்து பார்” என்பதுதான் உண்மை.

அவளிடம் உங்கள் குலவிருத்தியை எதிர்பார்க்கும் நீங்கள் உங்கள் குல விளக்காக கொண்டாட மறந்துவிடுகறீர்கள்.

வேலை, வீடு, குழந்தை பராமரிப்பு என்று எல்லாவற்றயும் அவள்பொறுப்பில் விட்டு விட்டு பறந்து போ என்று கூறுவது சரியா?

பெண்கள் பெண்ணியம் பேசுகிறார்கள் என்று குற்றம் கூறுவதை விட்டுவிட்டு அவளுக்கான அடிப்படை உரிமைகள் நீங்கள் வாழும் வீடுகளில் கொடுக்கப்படுகிறதா என்று சிந்தித்து பாருங்கள்.

மகள், மனைவி, தாய் என்று எல்லாப் பரிமாணங்களிலும் உங்கள் வாழ்வோடு கூடவரும் பெண்மைக்கு கோவில்கட்ட வேண்டாம் கோபுரத்தில் வைக்கவேண்டாம் குறைந்தது அவளுக்கான மரியாதையை பொது இடங்களில் கொடுங்கள்.

வீட்டில் வீட்டு வேலைகளை பகிர்ந்து கொள்ளுங்கள் குழந்தைகளின் விடயத்தில் அவள் பார்துக்கொள்வாள் என்ற அலட்சியத்தை விடுங்கள்.

பெண்ணிற்கான ஓய்வு என்பது அவளின் உடலும் மனமும் இளைப்பாறவே அதற்கான நேரத்தை கொடுங்கள்.

பெண்ணின் சுதந்திரம் என்பது அவள் வாழும் வீட்டில் இருந்தே ஆரம்பிக்கின்றது.

அறம் பெண்ணின் திறன் என்றால் அதை வகுப்பது இந்த சமூகமே.

சமூகம் என்பது குடும்பங்களின் சேர்க்கையே குடும்பங்களிற்கு ஊடகவே பெண்களிற்கான அடிப்படை உரிமை ஆரம்பமாகிறது என்பதுதான் நிதர்சனமான உண்மை.

எனவே பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து நல்ல குடும்பகட்டுப்பாடுகளின் ஊடாக ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குங்கள்.




BEAUTY COMPLEX EUROPE LTD
NuZen
HERBAL GREEN TEA
AN ESSENCE OF INDIAN TASTE
EXPORT QUALITY
RICH IN ANTI-OXIDANTS
BOOTS IMMUNE SYSTEM
IMPROVES DIGESTION
PROMOTES WEIGHT LOSS
SLOWS AGEING
NATURAL DETOX
10 HERBS WITH GREEN TEA
Boost Your Immunity
துளசி Tulasi
பிங்க் உப்பு Pink Salt
மிளகு Pepper
இஞ்சி Ginger
கிராம்பு Clove
ஜாதிக்காய் Nutmeg
ஏலக்காய் Cardamom
இலவங்கப்பட்டை Cinnamon
ஆன்டி ஆக்ஸிடண்ட் நிறைந்தது
நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்
செரிமானத்தை மேம்படுத்தும்
உடல் எடையைக் குறைக்க உதவும்
முதிர்ச்சியைக் கட்டுப்படுத்தும் | உடலில் நச்சுக்களை வெளியேற்ற உதவும்
MARKETING EXECUTIVE
BEAUTY COMPLEX EUROPE LTD
Unit 8, Chandani Bazaar 29 / 33, Ealing Road
Wembley, Middlesex HA0 4YA, London, ( UK )
www.beautycomplex.co.uk info@mybeautycomplex.com
00 44 ( 0 ) 77 10 64 63 59
MARKETING EXECUTIVE
Subash European Ltd
1, Rue Alfred Noble, 93600 Aulnay - sous - Bois, France
Tel : 00 33 65 28 27 303 / 00 33 66 96 67 571
MARKETING EXECUTIVE
TMT Asian food GMBH
Zen00 41 56 611 95 85 / 00 41 78 748 16 89
Tel : 00 41 56 611 95 85 / 00 41 78 748 16 89
ESAN BEAUTY COMPLEX
8887, The Gore Road, Brampton, Ontario L6P 2K9
Canada
Tel - 90 59 15 25 15 | 416 45 02 515

# உலக கோடி கோடீஸ்வரர் காதல் கதை

## 3 மனைவியர் 12 பிள்ளைகள் 4வதும் தயார்



கணனி யுகச் சாதனையாளர். அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் வலக்கரமாக இன்று வலம் வருபவர். ட்ரம்பின் தேர்தலில் அவருக்காக வாக்களிக்கும் வாக்காளர் ஒவ்வொருவருக்கும் ஒருகோடி டாலர் கொடுக்க முன்வந்தவர்.

இவரது மதிப்பு மட்டும் 437.5 பில்லியன் (கோடானுகோடி).

எலன் மஸ்க் என்பது இவர் பெயர். கணனி யுகப் பிரமுகர். பல கோடிகளுக்கு அதிபதியாகி உலகில் பிரபல்யம் அடைந்துள்ள எலன் மஸ்க்கின் காதல் வாழ்க்கையும் மிகப் பிரபல்யமாக உலகை வலம் வருவதுண்டு.

பார்வைக்கு கம்பீரமாகவும், இன்னும் சொல்வதானால் சாமுத்திரிகா லட்சண முத்திரையுடன் அழகு இராணிகள் மத்தியில் வலம் வருகிறார்.

இதுவரையில் மூன்று அழகிகளைத் திருமணம் செய்தவர். இவருக்கு 12 பிள்ளைகள்.

மூன்று மனைவிகளுடனும் உறவைப் பரிமாறிக்கொள்வது ஒரு  தொடர் கதை.

இந்த உறவுகளிலும் சில சுவாரஸ்யமான சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. பலருக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால் இவை ஊரறிந்த உண்மை!.

காலத்திற்குக் காலம் இரண்டு மனைவியர்களைப் பிரிந்து வாழ்ந்துவிட்டு பின்னர் அவர்களைத் திருமணம் செய்து வாழ்க்கை நடத்தியவர்.

இவரது மனநிலையை அறிவதற்கு பலரும் முயற்சித்தும் எதையும் அறிந்தவர்களும் இல்லை.

இப்போது இவர் ஒரு திரை உலக அழகு ராணி மீது மயங்கி காதல் வலையை விரித்திருப்பதாகக் கிசுகிசுக்கள் பத்திரிகைகளில் வெளிவர ஆரம்பித்துள்ளன.

இதே சமயத்தில் அமெரிக்காவில் ட்ரம்ப் வீட்டிற்கு அண்மையில் 35 மில்லியன் (அமெரிக்க டொலர்) செலவில் ஆடம்பரமான வீடொன்றை வாங்கி இருக்கிறாராம்.

எதற்காக இந்த வீட்டை வாங்கியுள்ளார் என்பது சுவாரஸ்யமான செய்தி என பத்திரிகைகள் சில கூறுவதாவது -

எல்லா மனைவியர்களையும், 12 பிள்ளைகளையும் ஒரே வீட்டில் குடிவைக்கப் போகிறாராம்!

# இலண்டனில் கொழும்பு இந்துக்கல்லூரியின் முன்னாள் மாணவர் ஒன்றுகூடல் விழா






இலண்டனிலுள்ள கொழும்பு இந்துக் கல்லூரியின் முன்னாள் மாணவர்களால் வருடாவருடம் நடாத்தப்படும் ஒன்றுகூடல் விழா சமீபத்தில் இலண்டனில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இவ்வருட விழா இலண்டனிலுள்ள பிரபலமான T & K ACCOUNTING GROUP அனுசரணையில் திரு. கிருபானந்தன், திரு. வித்தியாசங்கர் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் மங்கல விளக்கேற்றிவைத்து விழாவை ஆரம்பித்து வைத்தார்கள். இவ்விழாவில் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவிக்கரம் கொடுக்கும் பழைய மாணவர்களும், மற்றும் பல ஆதரவாளர்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. கொழும்பு இந்துக்கல்லூரியின் முன்னாள் மாணவர்களும், கல்லூரியின் நலன் விரும்பிகளும், நண்பர்களும் கலந்து சிறப்பித்தனர். இராப்போசன விருந்துபசாரத்துடன் விழா நிறைவுற்றது.

---


வீட்டிற்கு ஒரு சீமைக்குரல்
உங்கள் வீடு தேடி வர...
சந்தாதாரர் ஆகுங்கள்...

கீழ்கண்ட எண்ணிற்கு உங்கள் விபரத்தை அனுப்பி வைக்கவும்.
1 வருடத்தில் நான்கு முறை £20.00 மட்டும்
0044(0) 7710 64 63 59
Email: admin@seemaikural.com

BANK DETAILS
Bank: Natwest bank
House of Seemai Kural
Account Number: 21111944
SODE Code: 52-10-33



துவாரகா கிருஷ்ணராஜன்
லண்டன்

# வெளிநாட்டுத் தமிழர்களின் வாழ்வில் சமூகப் பிரச்சனைகள்

வெளிநாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளை பொறுத்தவரை கணவன் மனைவி இருவரும் பொருளாதர தேவைகளின் நிமித்தம் வேலைக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது.

இதனால் குழந்தைகளுடன் தாய் தந்தை செலவிடும் நேரம் மிகவும் குறைவாகவே இருக்கும்.

வேலைப்பழு, பொருளாதார நெருக்கடி என்பன பெற்றோர்களைப் பல அழுத்தங்களிற்குள் தள்ளுகின்றது.

அதைத் தவிர வேலை இடங்களில் கொடுக்கப் படும் வேலைச்சுமை, அழுத்தங்கள், நேரக்குறைவு, முறையான தூக்கமின்மை என்பனவும் பெற்றோரின் மனநிலையை சோர்வு ஆக்குகின்றது.

இச்சூழ்நிலைகள் கணவன்மனைவி பிரச்சனைகளாகவும் குடும்பப் பிரச்சனைகளாகவும், பிள்ளைகள் மீது பிரச்சனைகளாகவும் மாறுகின்றது.

தினமும் பிரச்சனைகளோடு பாடசாலை செல்லும் பிள்ளைகள் கல்வியில் கவனம் செலுத்தாமல் சாதரண வேலைகளைக்கூட சரியாகச் செய்யமுடியாமல் போகின்றது.

**அழகான வாழ்க்கையை விரயமாக்கல்**

இவ்வாறான பிரச்சனைகள் பிள்ளைகள் மூலம் பாடசாலையின் கவனத்திற்கு செல்கின்றது. பாடசாலை (social services) உடன் சேர்ந்து குடும்ப வன்முறை சட்டத்தின் ஊடாகப் பிள்ளைகள் மீது வன்முறை பிரயோகப்படுத்தப்பட்டதை உறுதிப்படுத்துகின்றது . அரசாங்கம் பிள்ளைகளின் உடல் உள பாதுகாப்பின்மையை கருத்தில்கொண்டு பிள்ளைகளை தங்கள் பொறுப்பில்



எடுத்துக்கொள்கின்றது.

பின்பு பிள்ளைகளை வேறு இனத்தவர்களிடம் வளர்க்கக் கொடுக்கின்றன. இதன் விளைவு தமிழ் குழந்தைகள் வேறு கலாசார மரபுகளோடு வளர்கின்றது.

இங்கு தான் தமிழ் குழந்தைகளின் எதிர்காலம் சவாலானதாக மாறுகின்றது. எனவே பெற்றோர்களே இந்த உலகில் பிள்ளைகள் எமக்காக பிறந்தவர்கள் அவர்களுக்காக உங்கள் நேரத்தை ஒதுக்குங்கள். அவர்களின் அழகான வாழ்க்கையை வளமாக்குங்கள். வேலையில் ஏற்படும் அழுத்தங்களை அங்கேயே விட்டுவிட்டு வாருங்கள்.

வீட்டில் மகிழ்சியான சூழலை உருவாக்குங்கள் இவ்வாறு எம் வாழ்வு முறையை மாற்றுவதால் சமூக ஏற்றத்தாழ்வுகளிலிருந்து ஒரு தமிழ் சமூகத்தை காப்பாற்றிக்கொள்ள முடியும்.

உங்கள் வீட்டிற்கே வர வேண்டுமா? | சந்தாதாரர் ஆகுங்கள்...

உலகமெங்கும் தமிழ் வளர்ப்போம் !
தமிழால் ஒன்றிணைவோம் !

# சீமைக் குரல்

Name : ______________________ Tel : ______________________

Address : ______________________ Email : ______________________

Bank - Natwest Bank
**HOUSE OF SEEMAI KURAL**
Account Number - 21 11 19 44
Sode Code - 52 - 10 - 33
SWIFTBIC - NWBKGB2L
Iban - GB 56 NWBK 52 10 33 21 11 19 44

கீழ்க்கண்ட எண்ணிற்கு உங்கள் விவரத்தை அனுப்பி வைக்கவும்....

1 வருடத்தில் நான்கு முறை £15.00 மட்டும்..!

0044 (0) 7710646359





# நயன்தாரா தயாரிக்கும் படம்

நயன்தாரா தயாரிப்பில், ஹரி இயக்கத்தில் நாயகனாக நடிக்க நடிகர் விஜய் சேதுபதியுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதுவரை ஹரி இயக்கத்தில் கமர்ஷியல் நாயகனாக விஜய் சேதுபதி நடித்தது இல்லை.



# அமெரிக்காவில் கதை விவாதத்தில் கமல்ஹாசன்

அமெரிக்காவிற்கு படிக்க சென்றுள்ள கமல் அங்கு தன் அடுத்த பட வேலைகளை பார்ட் டைமாக தொடங்கி இருக்கிறார். அவரின் அடுத்த படத்தை அன்பறிவு மாஸ்டர்கள் தான் இயக்க உள்ளனர். இப்படம் மூலம் அவர்கள் இருவரும் இயக்குனர்களாக அறிமுகமாக உள்ளனர். இப்படத்தின் டிஸ்கசன் தற்போது அமெரிக்காவில் நடைபெற்று வருகிறதாம். இதற்காக அன்பறிவு மாஸ்டர்கள் இருவரும் அமெரிக்கா சென்றுள்ள நிலையில், அவர்கள் அங்கு கமல்ஹாசன் உடன் எடுத்த புகைப்படங்கள் வெளியாகின.



# வெற்றிமாறன் படத்திலிருந்து விலகிய பிரகாஷ்ராஜ்

தலைவராகவும் தோழர் கேகே, கதாபாத்திரத்தில் விடுதலை படத்தில் நடிகர் கிஷோர் நடித்து இருந்தார். இதில் மிகவும் நேர்த்தியாகவும், சிறப்பாகவும் பொருந்தி இருந்த கிஷோரின் நடிப்பால் தோழர் கேகேவாகவே அதில் வாழ்ந்தார். இருப்பினும் இந்த கதாபாத் திரத்திற்காக முதலில் தேர்வு செய்யப்பட்டவர் நடிகர் பிரகாஷ் ராஜ் தானாம். இவர் இப்படத் தில் ஒரு சில நாட்கள் நடிக்கவும் செய்துள்ளார். ஆனால் வேறு படத்தின் கால்ஷீட் இருந்த காரணத்தால் படத்தின் பாதியிலேயே விலகி விட்டார்.



பயில்வான் ரங்கநாதன் வழங்கும்

## சினிமா துணுக்குகள்!



# நடிகரின் டார்ச்சர்

டெக்காயிட் என்ற தெலுங்கு படத்தில் அதிவிசேஷ் கதாநாயகனாகநடித்தார்! அந்த படத்தின் டீஸர் ஷூட்டிங்கும் நடைபெற்றது. ஆனால் ஷூட்டிங் தொடங்காமல் தாமதம் ஆகி வந்தது. இந்நிலையில் ஸ்ருதி அந்த படத்தில் இருந்து விலகிவிட்டாராம். ஷூட்டிங் தள்ளிப்போய்கொண்டே இருந்ததால் டேட் ஒதுக்குவதில் பிரச்சனை காரணமாக இருக்கலாம் என முதலில் கூறப்பட்டது. ஆனால் அது உண்மையான காரணம் அல்ல, படத்தின் கதையில் ஹீரோவின் டார்ச்சர் அதிகம் இருக்கிறது என்றும், அது அவருக்கு பிடிக்காததால்தால் தான் விலகிவிட்டார். ஸ்ருதி ஹாசனுக்கு பதில் மிருனாள் தாகூர் தற்போது ஒப்பந்தம் ஆகி இருக்கிறார்.

# சமந்தாவின் சைடு பிசினஸ் சமந்தா

ஹைதராபாத்தை சேர்ந்த அர்பன் கிஷான் என்ற ஸ்டார்ட் அப் நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளார் நடிகை சமந்தா. இந்த நிறுவனம் மண் இல்லாமல் காய்கறிகளை விளைவித்து வருகிறது. நவீன தொழில்நுட்பம் மூலம் நீர் மற்றும் காற்றின் ஈரப்பதத்தை பயன்படுத்தி உணவு பொருள்களை விளைவித்து வருகிறது.





# தனுஷ் படப்பிடிப்பு பாதியில் நிறுத்தம்

தனுஷ் இட்லி கடை என்ற படத்தை இயக்கி நடிக்கிறார். இந்த படத்தின் ஷூட்டிங் தேனி உள்ளிட்ட தனுஷின் சொந்த ஊர்ப் பகுதிகளில் தொடங்கி நடந்தது. இந்த படத்தில் பல முன்னணி நடிகர்கள் நடித்து வருகின்றனர். படத்தில் ராஜ்கிரண், சத்யராஜ், நித்யா மேனன் மற்றும் அருண் விஜய் ஆகியோர் முக்கிய வேடத்தில் நடிக்கின்றனர். படத்தின் பெரும்பாலானக் காட்சிகள் தேனி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் நடந்தது. அடுத்த கட்ட ஷூட்டிங் பாங்காங்கில் நடக்கவுள்ளது. இந்நிலையில் படத்தின் முக்கியமானக் காட்சிகளை தேனி சுற்றுவட்டாரப் பகுதிகளை தனுஷ் நடத்திவந்தார். இந்நிலையில் தனுஷூக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் ஆக்ஷன் காட்சிகளில் நடிக்க முடியாது என்பதால் தற்போது ஷூட்டிங் தள்ளிவைக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. மீண்டும் ஜனவரி மாதத்தில் ஷூட்டிங் மீண்டும் தொடங்குகிறது.



# நாடக நெறியாள்கையில் பொன்விழா கண்ட தமிழ் அவைக்காற்றுக்கலைக்கழக இயக்குநர் க.பாலேந்திரா



எஸ்.கே.ராஜென்
ஊடகவியலாளர்
பிரித்தானியா

இலங்கையில் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் தொடங்கிய நாடகப்பணியை அரை நூற்றாண்டு தாண்டியும், நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்து வாழ்கின்ற பொழுதிலும் தடங்கல் எதுவும் இன்றித் தொடர்ந்து வரும் கலைஞர் க.பாலேந்திரா அவர்கள். நாடகங்களை நெறியாள்கை செய்வதில் 50 ஆண்டுகளை நிறைவுசெய்து, நாடக இயக்கத்தில் பொன்விழாவை நாடகங்களை மேடையேற்றி லண்டனில் கடந்த 23.11.2024 அன்று கொண்டாடினார்.

லண்டன் மாநகரில் சீரற்ற கால நிலை. போக்குவரத்துத்தடங்கல்கள் எனப் பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் அரங்கம் சுறுசுறுப்பானது. பாலேந்திராவின் நாடக நிகழ்வு. அது உரிய நேரத்துக்கு ஆரம்பித்து விடும். அரங்கை நாடக அபிமானிகள் நிறைத்தார்கள்.

நிகழ்வு ஆரம்பமாவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னதாகவே அனேகமானவர்கள் வந்து சேர்ந்து விட்டார்கள். யார் யார் நாடக ரசிகர்களாக இருக் கின்றார்களோ அவர்களுக்கெல்லாம் பாலேந்திரா சிறப்பான அழைப்பை அனுப்பி வைத்ததன் பயனாக ரசிகர்கள் வருகைபுரிந்திருந்தனர்.

பொன்விழா நிகழ்வு வருகை புரிந்த அனைவரும் தேனீர், சிற்றுண்டி வழங்கி வரவேற்கப்பட்டனர்.

ஈழத்து நாடக வரலாற்றில் க.பாலேந்திரா நீண்ட காலப்பதிவைக் கொண்டிருக்கிறார்.

இலங்கையில் தொடங்கிய அவரது நாடகப் பயணம் இன்று உலகப்பரப்பெங்கும் தொடர்கிறது. இந்த நாடகப்பயணம் இலகுவானதல்ல. இதற்குள் உள்ள கஷ்டங்களைப்பட்டியல் இட்டால், பெரும் ஆச்சரியம் ஏற்படும். இவற்றையெல்லாம் தாண்டி, இன்றைய இளைய தலைமுறையினரையும் இந்த நாடகத்துறைக்குள் இழுத்துவந்து பயிற்சிகள் வழங்கி, நாடகங்களில் நடிக்க வைத்து, அவர்களை நாடகக்கலைஞர்களாகத்திகழ வைக்கும் மிக உன்னதமான பணியை எவ்வித ஆரவாரமுமின்றி மேற்கொண்டு வருகிறார் பாலேந்திரா.

இவர் 1974 முதல் இப்பொழுது வரை நாடக உலகில் 70 மிகக்கனதியான நாடகங்களை நெறிப்படுத்தி அரங்கேற்றியுள்ளார்.

இப்பொழுது 2024 50 ஆண்டு காலம், அறாத் தொடராக நாடக அளிக்கைகளுக்கு இலங்கையிலும் மேலை நாடுகளிலும் ஓர் ஒப்பற்ற நெறியாளராகப் பணியாற்றி வருபவர் பாலேந்திரா.

இதனைக்கொண்டாடும் விதமாகவே கடந்த 23ம் திகதி நாடக விழா நடைபெற்றது. மூன்று நிகழ்வு கள் நடைபெற்றன. உரைகளும் நிகழ்த்தப்பட்டன. 'ஏவம் இந்திரஜித்' என்ற நாடகத்தை தழுவி 1980ம்



ஆண்டு இலங்கையில் பாலேந்திரா தயாரித்தளித்த 'முகமில்லாத மனிதர்கள்' புதிய தயாரிப்பாக முதல் நாடகமாக அரங்கேற்றப்பட்டது.

அம்பையின் 'ஆற்றைக் கடத்தல்' நாடகம் அடுத்து அரங்கேறியது. தொடர்ந்து 'கானசாகரம்' மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இடைவேளை இன்றி மூன்று நிகழ்ச்சிகளும் அரங்கை அலங்கரித்தன. இரசிகர் அவையைக் கவர்ந்து கொண்டன.

'முகமில்லாத மனிதர்கள்' நாடகம் புதிய தயாரிப்பாக அன்று மேடையேற்றப்பட்டது. புதிய பாணியில் நிகழ்த்தப்பட்டது. இந்த நாடகம் முதல் முறை தயாரிக்கப்பட்டபொழுது நடித்தவரான, ஈழத்தின் புகழ்பெற்ற பாடகர், 'ஓ வண்டிக்காரா' புகழ் மாணிக்கம் சத்தியமூர்த்தி எழுத்தாளராகப் பிரதான பாத்திரம் ஏற்று நடித்தார். அன்று அவர் நடித்த பொழுது இருந்ததைப்போலவே இப்போதும் அவர் நடித்தார், இரசிகர்களின் பாராட்டைப் பெற்றார்.

ஏனைய நடிகர்களும் தமது பாத்திரங்களை உணர்ந்து மிகச் சிறப்பாக நடித்திருந்தனர். சா. வாசுதேவன், கே.ரமேஷ் , யசோமன், விஜயகுமாரி பரமகுமரன், தர்ஷினி சிவசுதன் ஆகியோரின் நடிப்பு அவையைக் கவர்ந்து கொண்டது.



இந்தக் கலைஞர்கள் எல்லோரும் கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக பாலேந்திராவோடு அரங்க இயக்கத்தில் அர்ப்பணிப்புடன் லண்டனில் இயங்கி வருபர்கள் என்பது மிகவும் பாராட்டுக்குரியது. தமது பொன்னான நேரத்தை, எல்லோரும் தங்கள் நேரத்தைப் 'பவுண்ட்' களுக்காக வழங்கும் நாட்டில் நாடகத்துக்காக அர்ப்பணிப்பது, கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தொடர்கிறது என்றால் அந்தக் கலைஞர்கள் அனைவரும் மிகவும் பாராட்டுதல்களுக்கு உரியவர் கள். இதுவரை காலமும் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழக நிகழ்வுகளில் பாடகியாகத் திகழ்ந்து வந்த விஜயகுமாரி பரமகுமரன் முதல் முறையாக இந்த நாடகத்தில் நடிகையாக அறிமுகமாகியுள்ளார்.

இந்த நாடகத்திற்காக ஈழத்து கவிஞர் ச. வாசுதேவன் எழுதிய பாடல்கள், இசைவாணர் எம். கண்ணன் அவர்களின் இசையமைப்பில் நாடகத்தில்



இடம் பிடித்தன.

லண்டனில் பிறந்து வளர்ந்த இரு இளம் கலைஞர்கள் இசை வழங்கினார்கள் சுரத்தட்டு இசையில் தர்ஷினி கங்கைநாதன் மிருதங்கத்தில் ராம்கீரன் சிவசுப்பிரமணியம் மிகச் சிறப்பாக தமது பங்கை மேற்கொண்டனர்.

அடுத்து, சாகித்திய அரசு விருது பெற்ற தமிழ் எழுத்தாளர் அம்பை அவர்களது 'ஆற்றைக் கடத்தல்' நாடகம் ஆனந்தராணி பாலேந்திரா அவர்களின் தனிநடிப்பாக மேடை ஏறியது. அம்பை அவர்களின் எண்பதாவது பிறந்தநாளை கொண்டா டும் வகையில் இந்நாடகம் மேடையேற்றப்பட்டது. இந்த இரண்டு நாடகங்களுடன் 'கான சாகரம்' ஈழத்து மெல்லிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

மேர்ட்டன் தமிழ் பாடசாலை அதிபர் திரு. பத்மமோகன், பாலேந்திரா 74இல் தயாரித்த முதல்

நாடகங்களை பற்றி விவரமாக உரையாற்றினார்.

அடுத்ததாக சிறுவனாக லண்டனில் பாலேந்திரா வின் நாடக இயக்கத்தில் 23 வருடங்களுக்கு முன் இணைந்த சந்தோஷ் ஆனந்தன் என்ற இளைஞர் தனது நாடகப் பயண அனுபவத்தை மிகவும் சிறப்பாக தமிழில் எடுத்துக் கூறினார்.

அடுத்ததாக மொரட்டுவ பல்கலைக்கழக தமிழ் சங்கத்தில் 1974ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாலேந்திராவின் நாடக செயற்பாடுகளைப் பார்த்த சமகாலத்தில் அங்கு பொறியியல் பயின்ற கவிஞர் கந்தையா ராஜமனோகரன் சுவையாக அந்த காலத் தில் இருந்து இன்று வரை பாலேந்திராவுடனான தனது உறவை சில சம்பவங்களை நினைவு கூர்ந்து அவருக்கே உரிய பாணியில் அழகாக உரையாற்றி னார்.

இறுதி நிகழ்வாக நடைபெற்ற கானசாகரம் நிகழ்ச்சியில் கலாநிதி தர்ஷினி சிவசுதன், மஞ்சுளா சத்தியேந்திரன் , விஜயகுமாரி பரமக்குமரன், மாணிக்கம் சத்தியமூர்த்தி ஆகியோர், ஈழத்துக் கவிஞர்கள் சி.சிவசேகரம், பேரன், சண்முகம் சிவலிங்கம், நீலாவணன் ஆகியோரது கவிதைகளை பாடல்களாகப் பாடினர்.

இதில் இடம் பெற்ற பாடல்களுக்கு இசைவாணர் கண்ணனும் லண்டனில் இருக்கும் வி.கே. தேவலிங்கம் அவர்களும் இசையமைத்துள்ளனர்.

லண்டனில் பிறந்து வளர்ந்த இரு இளம் கலைஞர்கள் இசை வழங்கினார்கள் சுரத்தட்டில் தர்ஷினி கங்கைநாதன், மிருதங்கத்தில் ராம்கீரன் சிவசுப்பிரமணியம் மிகச் சிறப்பாக தமது இசைப்பணியை மேற்கொண்டனர்.

அரங்கில் அமர்ந்திருந்த பார்வையாளர்கள் நிகழ்ச்சிகளுடன் ஒன்றித்திருந்தார்கள். சுமார் இரண்டரை மணி நேரம் நல்லதோர் நிகழ்வைப் பார்த்து மகிழ்ந்த திருப்தியைப்பார்வையாளர்கள் அடைந்தனர். நாடக நெறியாள்கையில் பொன்விழா கொண்டாடிய க.பாலேந்திரா அவர்களுக்கு சீமைக்குரல் குடும்பம் வாழ்த்துகள் தெரிவித்து மகிழ்கிறோம்.

**நன்றி: வீரகேசரி**




BEAUTY COMPLEX EUROPE LTD
Rathi
OrthoZen
முதுகு வலி,
முழங்கால் வலிகள், மூட்டுவலிகள்
கீழ்வாதம், ஆஸ்டியோ ஆர்த்ரிடிஸ்
மற்றும் பிற பொதுவான தசைவலிகளில் உங்களை
முடக்க வேண்டாம்.
Rathi OrthoZen
Herbal Pain Relief Oil
FOR EXTERNAL USE ONLY
Herbal Pain Relief Oil
Relieves Joint Pains
50 ml
Spring Back to Life
Narikela Tailam
Nirgundi
Karpura
Aswagandha
Nimba
Devadaru
Sobhanjana
Peppermint satwa
வலிகள் குறைய மகிழ்ச்சி நிறைய...
Pain Relief oil Benefits
100% HERBAL
Provides relief
Joint pains
Lower back pain
Knee pains
Provides relief | Lower back pain | Knee pains | Joint pains | Arthritis, Osteo arthritis
and also other generalized muscle pains
முதுகு வலி | முழங்கால் வலிகள் | மூட்டு வலிகள் |கீழ்வாதம், ஆஸ்டியோ ஆர்த்ரிடிஸ் மற்றும்
பிற பொதுவான தசை வலிகள்
SHOP
BEAUTY COMPLEX EUROPE LTD
Unit 8 , Chandani Bazar 29 / 33 , Ealing Road
Wembley , Middlesex HA0 4YA, London , ( UK )
ORDER
www.beautycomplex.co.uk
info@mybeautycomplex.com
00 44 ( 0 ) 77 10 64 63 59
ORDER BY EBAY
MARKETING EXECUTIVE
BEAUTY COMPLEX EUROPE LTD
Unit 8 , Chandani Bazar 29 / 33 , Ealing Road
Wembley , Middlesex HA0 4YA, London , ( UK )
www.beautycomplex.co.uk info@mybeautycomplex.com
00 44 ( 0 ) 77 10 64 63 59
MARKETING EXECUTIVE
Subash European Ltd
1 , Rue Alfred Noble , 93600 Aulnay - sous - Bois, France
Tel : 00 33 65 28 27 303 / 00 33 66 96 67 571
MARKETING EXECUTIVE
TMT Asian food GMBH
Tel : 00 41 56 611 95 85 / 00 41 78 748 16 89
ESAN BEAUTY COMPLEX
8887 , The Gore Road, Brampton, Ontario L6P 2K9
Canada
Tel - 90 59 15 25 15 | 416 45 02 515
E - Esancomplex8887@gmail.com



# மணஉறவால் மனமுறிவை முறியடிப்போம்!!!

## கணவன் - மனைவி உறவு புனிதமானது!

கணவன் - மனைவி என்னும் பந்தத்தைவிட புனிதமான உறவு வேறெதுவும் இல்லை. இல்லறம் என்பது குடும்ப வாழ்வின் மூலம் இருவரும் இணைந்து ஆற்ற வேண்டிய அறச்செயல்களுக்கான களம்.

புரிதலுடன்கூடிய தம்பதியரின் நல்லுறவு, ஒழுக்க நெறியில் குழந்தை வளர்ப்பு, பெற்றோர் பராமரிப்பு, உறவு பேணுதல், உதவி புரிதல் ஆகியவையே நல்ல குடும்பத்தின் உட்கூறுகள். நல்ல தம்பதியர் நல்ல குடும்பத்தை உருவாக்குகின்றனர். நல்ல குடும்பங்கள் நல்ல சமுதாயத்தை உருவாக்குகின்றன. இதைப் புரிந்து கொள்ளாததின் விளைவுதான், பல குடும்பங்களில் பிரச்சினைகள், மனக்கசப்புகள், பிரிவினைகள்.


இன்றைய காலகட்டத்தில், பழைய நண்பர்களுடன் சந்திப்பு (டியவஉாஅயவநியசவல), குறிப்பிட்ட ஊர் மக்கள் சந்திப்பு, சமூக விழா விருந்துகளில் சந்திப்பு (பார்ட்டிகள்) போன்ற நிகழ்வுகள் நவீன கலாச்சாரத்தில் இயல்பானவை. இவை இளவயது நட்புகளை மீட்டெடுப்பதோடு பல குடும்பங்களில் உறவுகளையும் உருவாக்குகின்றன. பழைய நினைவுகளைத் தொடர்ந்து புதிய உறவுகள் உருவாகுவது இயல்பாக இருந்தாலும் சில நேரங்களில் அவை குடும்ப வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்குகின்றன.

சமூக வலைத்தளங்களில் அறிமுகமான நட்புகள் எளிதாக விரிவடைந்து ஒருவரின் குடும்பப் பிரச்சினைகள் மற்றவர்களுடன் பகிரப்படுகின்றன. இதனால் சிலர் தவறான நபர்களுடன் உறவு கொள்வதால் குடும்பத்தில் சிக்கல்கள் தோன்றுகின்றன.

கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் வேலைப் பளுவை சீராகப் பிரித்துக் கொள்ளாமையால் குடும்பத்தில் பிரச்சினைகள் உருவாகின்றன. ஒருவரின் வேலைப்பளு மற்றொருவரின் வாழ்க்கையை நேரடியாகத் தாக்குவதோடு மன உளைச்சலையும் உருவாக்குகிறது.

சில நேரங்களில் வீட்டின் அனைத்து வேலைகளும் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்புகளும் ஒருவரின் மீது மட்டுமே சுமத்தப்படுகின்றன. இதனால் மற்றொருவர் வேலைச் சுமையைச் சமாளிக்க முடியாமல் மன அழுத்தத்திற்கு உள்ளாகிறார். இது கருத்து வேறுபாடுகளைப் பெருக்கி, பிரிவுக்கும் ,விவாகரத்துக்கும் காரணமாகிறது.

வீண்விவாதங்கள், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமை, பொருளாதரீதியான விலகல் முதலானவை கணவன் மனைவிக்கிடையில் இடைவெளியை ஏற்படுத்திவிடும். வீண் செலவுகள், மோசமான நிதிமேலாண்மை, பொருளாதாரச் சிக்கல்கள் ஆகியவை குடும்பங்களில் பெரும் பிளவுகளை உருவாக்கக் கூடியவை.


CHARNDRA
ASIAN GROCER
SPECIALISTS IN SRI LANKAN GROCERIES
GROCERIES
FRESH FISH & MEAT SPICES
FRESH FRUIT & VEG
HOMEWARE ITEMS
& MANY MORE!
217 BROMLEY ROAD, CATFORD SE6 2PG BELLINGHAM,
SOUTH EAST LONDON OPPOSITE CATFORD BUS GARAGE

சமூக வலைத்தளங்களில் அறிமுகமான குறுகிய கால நட்புகள், தவறான உறவுகளை உருவாக்கிக் குடும்பங்களில் விசுவாசக் குறைபாடுகளை உருவாக்குகிறது.

வேலை காரணமாகக் கணவர்கள் அதிக நேரத்தை வீட்டுக்கு வெளியிலேயே செலவிட நேர்வதால், பெண்கள் தனிமையில் வாழ நேரிடுகிறது. இந்தத் தனிமை மன அழுத்தத்தைப் பெருக்கி, அது குடும்பப் பிரச்சினைகளையும் கருத்து வேறுபாடுகளையும் அதிகரிக்கச் செய்கிறது.

மேலும் கணவன் மனைவி ஒருவருக்கொருவர் போதுமான நேரம் ஒதுக்காததால் அவர்களுக்கிடையிலான தொடர்பு குறைந்து, இடைவெளி அதிகரித்து, அவர்களின் பிரிவுக்குக் கொண்டு செல்லக் கூடும்.

தனிமை மற்றும் நேரக்குறைவால் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தவிர்க்க, தம்பதிகள் ஒருவருக்கொருவர் நேரம் ஒதுக்கி, மனத்தளவில் ஒற்றுமையை உருவாக்க வேண்டும். மனம் விட்டுப் பேசுவதும், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதும், அவர்களிடையே பாசத்தை உருவாக்கிப் பிரிவுகளைத் தடுக்கும்.

தமிழக் குடும்பங்களில் பாரம்பரியமாகப் பெண்கள் குடும்பப் பொறுப்புகளை முழுமையாக ஏற்றுக் கொள்கிறார்கள். வீட்டின் ஒழுங்கும், பிள்ளைகளின் வளர்ச்சியும் பெண்களின் முயற்சியால் சீராக நடைபெற்றாலும், அவர்கள் தமது கடமைகளை நிறைவேற்றிய பிறகு எஞ்சிய வாழ்க்கையைத் தனக்குப் பிடித்தவாறு மாற்றிக் கொள்ள விரும்புகிறார்கள். ஆன்மிகப் பயணத்தை நாடவும், தாம் விரும்பியவாறு தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் விரும்புகிறார்கள். பல ஆண்டு கால தாம்பத்திய வாழ்வில் என்ன மகிழ்ச்சி மிஞ்சியிருக்கிறது என்ற விரக்தி இவர்களை விரட்டி, விவாகரத்துக்கு வித்திடுகின்றன.

குடும்பத்தில் கணவனோ அல்லது மனைவியோ மட்டும் குடும்பத்தின் அனைத்துப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டால், குடும்பத்தின் சமநிலை பாதிக்கப்படும். எனவே பொறுப்புகளைச் சமமாகப் பகிர்ந்து கொள்ளுதல் மூலம் குடும்பத்தில் ஒற்றுமையை நிலை நிறுத்தலாம்.

சுயமாக சம்பாதிக்கும் பெண்கள் ஆணாதிக்கச் சமுதாயத்தில் அடிமைகளாக இருக்க விரும்பாமல் விடுதலை உணர்வைத் தருகின்ற விவாகரத்தை நாடுகின்றனர். இது, அவர்களுக்கு தனித்து வாழ்வதற்கும், சமூகத்தில் தங்களின் உண்மையான அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கும் உதவுவதாகக் கருதுகிறார்கள்.

குடும்பம் என்பது கணவன், மனைவியின் ஒருமைப்பாட்டில் உருவாகும் ஒழுங்கமைப்பாகும். அவர்களது சண்டைகள், கருத்து வேறுபாடுகள் மற்றும் பிழைகள் பிள்ளைகளின் எதிர்காலத்தை நேரடியாகப் பாதிக்கக்கூடும். குடும்ப அமைப்பின் நிலைத்தன்மைக்கும் பிள்ளைகளை ஆரோக்கியமாக வளர்க்கவும் கணவன் மனைவியிடையே முழுமையான புரிந்துணர்வும் ஆதரவும் அவசியமாகும். இது ஒற்றுமையையும், சமூகத்தில் நல்ல மனப்பாங்குள்ள நபர்களாகப் பிள்ளைகள் வளர்ச்சி அடைவதையும் உறுதி செய்யும்.

நீண்ட காலம் தம்பதிகளுக்குள் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் அல்லது திருப்தி இல்லாத, மனநிறைவற்ற வாழ்க்கை என்பனவே விவாகரத்தைத் தூண்டுகின்றது. தம்பதியர்களின் மனமுறிவே மணமுறிவுக்குக் காரணம்.

விவாகரத்தில் இருந்து குடும்பத்தைக் காப்பதற்கான நடவடிக்கைகள்:

சரியான நண்பர்களைத் தேர்வு செய்யுங்கள். துன்ப காலங்களிலும் நோயுற்ற காலங்களிலும் தம்பதியர் தமக்குள் ஆதரவாகவும் அன்பாகவும் இருங்கள்.

கணவன் மனைவி ஒருவரை ஒருவர் மரியாதையாகவும் நம்பிக்கையாகவும் நடத்த வேண்டும்.

கணவன் மனைவி தங்களுடைய பிரச்சினைகள் குறித்து நேரம் ஒதுக்கி மனம் விட்டு உரையாட வேண்டும். ஒருவரை ஒருவர் உணர்ந்து, மற்றவரின் குறைகளை நெகிழ்வுடன் ஏற்றுக் கொள்வது அவசியம். குடும்பத்தை அன்புடனும் அரவணைப்புடனும் நேசிப்பதன் மூலம் ஒவ்வொரு குடும்பமும் அமைதியான வாழ்க்கையை உறுதிப் படுத்தும்.

மனப்பூர்வமாக ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம்.

கணவன் மனைவி இருவரும் தங்கள் வேலை நேரத்தையும் தங்கள் குடும்ப நேரத்தையும் சரியாக மேலாண்மை செய்ய வேண்டும்.

சிக்கனமாக செலவிடல், தேவையானவற்றை மட்டுமே வாங்குதல் முதலானவற்றை மேற்கொண்டு குடும்ப நிதியைத் திறம்படக் கையாளுதல் வேண்டும்.

சமூக வலைத்தளங்களில் செலவிடும் நேரத்தைக் குறைத்து குடும்பத்துடன் அதிக நேரம் செலவிடுவது அவசியம்.

தேவைப்பட்டால், சில நேரங்களில் நேரடி ஆலோசனை பெறுவது (Counselling) கணவன் மனைவிக்குள் நல்லுறவை மீட்டெடுக்க உதவும்.


வீட்டு வேலைகளையும் பிள்ளைகளின் பொறுப்புகளையும் சமமாகப் பகிர்ந்து கொள்வது குடும்பத்தில் ஒற்றுமையை வளர்க்கும்.

திருமணம் என்பது இருவர் இடையிலான ஒற்றுமையின் பயணம். குறைகள் யாரிடமும் இருக்கக்கூடும். ஆனால் அவற்றை சகித்துக்கொள்ளும் மனப்பான்மை, அடிக்கடி உரையாடல் மற்றும் அன்புடன் வாழும் ஆர்வம் ஆகியவை குடும்பத்தை வளமாக்கும்.



**தமிழ்த்தொண்டில் செந்தமிழ்த் தேனீ இரா மதிவாணன்**

# மாரடைப்பும் சூடான குடிநீரும்




> மாரடைப்பு வரும்போது பொதுவாக நெஞ்சு வலி ஏற்படாது. குமட்டல் மற்றும் கடுமையான வியர்வையே மாரடைப்பு ஏற்பட பொதுவான அறிகுறிகள் ஆகும்.

*நீங்கள் குளிர்ந்த தண்ணீர் குடிக்கும் பிரியரா?*

அப்படியென்றால் இது உங்களுக்குத்தான் உங்களுக்காக. உங்களின் விலைமதிப்பற்ற இரண்டு நிமிடங்களை செலவழித்து இதை கண்டிப்பாக படிக்கவும்.

**மாரடைப்பு மற்றும் சூடான குடிநீர்:**

சீன மற்றும் ஜப்பான் மக்கள் தங்களின் உணவிற்கு பிறகு குளிர்ந்த தண்ணீரை விடுத்து சூடான தேநீர் அருந்துவதை வழக்கமாக கொண்டுள்ளனர். இப்பழக்கத்தை நாமும் பின்பற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது.

சாப்பிட்டவுடன் குளிர்ந்த நீர் குடிப்பதனால், நம் உணவில் உட்கொண்ட எண்ணெய் பொருட்கள் திடப்பொருளாக மாறி செரிமானத்தை மெதுவாக்கிவிடும். திடப்பொருளாக மாறிய கலவை நம் வயிற்றில் இருக்கும் அமிலத்தோடு (Acid) வினைபுரியும். இது திட உணவை விட வேகமாக உடைந்து குடலால் உறிஞ்சபடும்.

இது நம் குடலில் அணிதிரண்டு அப்படியே நின்றுவிடும். மிக விரைவில், இது கொழுப்புகளாக மாறி புற்றுநோய்க்கு வழிவகுக்கும். ஆகவே உணவிற்கு பிறகு சூடான தண்ணீர் அல்லது சூப் குடிப்பது நல்லது.

**மாரடைப்பு பற்றி ஒரு குறிப்பு:**

மாரடைப்பின் முதல் அறிகுறி இடது கையில் ஏற்படும் கடுமையான வலி ஆகும். தாடையில் தீவிர வலி ஏற்பட்டாலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மாரடைப்பு வரும்போது பொதுவாக நெஞ்சு வலி ஏற்படாது. குமட்டல் மற்றும் கடுமையான வியர்வையே மாரடைப்பு ஏற்பட பொதுவான அறிகுறிகள் ஆகும். 60% சதவீத மக்கள் தூக்கத்தில் மாரடைப்பு ஏற்படும்போது அவர்களால் எழுந்துகொள்ள முடியாது.

உறக்கத்திலேயே இறந்துவிடுவர். தாடை வலி ஏற்பட்டவர்கள் மட்டுமே அயர்ந்த தூக்கத்திலிருந்து எழுந்து கொள்ள முடியும். ஆகவே எப்பொழுதும் கவனமாகவும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும்.



கி.செ.துரை
ஊடகவியலாளர்
டென்மார்க்

# 21ஆம் நூற்றாண்டின் அதிரடிப் போர்க்களம் மலர்ந்தது

போர்க்களம் என்பது படையெடுத்துச் செல்லும் பட்டாளங்களுக்கே சொந்தமானது என்ற காலம் காஸா, லிபியா, சிரியா போர்க்களங்களுடன் அடியோடு மாறி விட்டது.

பெரும் படைகளைக் கட்டி பெரும் ஆயுதங்களுடன் களத்திற்குப்போனால் வெற்றி பெறலாம் என்ற காலம் 2022 மாசி ரஸ்யப் படைகள் உக்ரேனை வெல்ல முடியாமல் பின் வாங்கியதுடன் முடிவடைந்து விட்டது. வீதிகள் நெடுக உடைந்து கிடந்த பல்லாயிரக் கணக்கான ரஸ்ய டாங்கிகள் புற்றினுக்கும் அவர் நண்பர்களுக்கும் 2ம் உலகயுத்த கனவுகளை மூட்டை கட்டி வைக்கச் சொன்ன அதிசயக் காட்சிகளாகும்

இரண்டாவதாக 2023 அக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதல் 1200 பேர் ஒரு சில மணி நேரங்களில் கொல்லப்பட்டு 250 பேர்வரை கடத்தப்பட்டது இஸ்ரேலை வேரோடு ஆட வைத்தது. எத்தனை படை பலம் இருந்தாலும் நவீன ஆயுதங்கள் இருந்தாலும் அவற்றின் பலவீனம் தெரிந்தால் அதையும் உடைக்கலாம் என்ற செய்தியைச் சொன்னது. இன்று வரை 101 இஸ்ரேலியப்பணய கைதிகளை இஸ்ரேலால் மீட்க முடியவில்லை.45 000 பேர் மடிந்துவிட்டார்கள்.

ஆனால் ஹமாஸ் தாக்கினாலும் தாக்காவிட்டாலும் இஸ்ரேலின் தாக்குதல் காஸா மீது நடந்துதான் இருக்கும். அவர்கள் நிகழ்ச்சித்திட்டம் தற்செயலான போர் அல்ல அது மிக நீண்டது. காஸா போர் முற்றி லும் புதிய ஆயுத விற்பனைக்கான பரிசோதனைப் போரே.

சின்னஞ்சிறிய காசாவைப் போல பரிசோதனைக்கான களம் உலகில் வேறெங்குமே கிடையாது. சின்னஞ்சிறிய நிலப்பரப்பை 200ற்கு மேற்பட்ட சிறு பகுதிகளாகப் பிரித்து ஏ.ஐ தொழில் நுட்பம் மூலமாக போரை முன்னெடுத்தது. இந்தப் பணியை மிக நீண்ட காலம் முன்னரே ஆரம்பித்திருந்தது. இதற்காக ஒரு போர்க்களத்தை உருவாக்கியது. அதுதான் வகை தொகையின்றி குண்டு மழை பொழிவது.

முழு நிலப்பகுதியுமே தரைமட்டம் மிகமிக பாரதூரமான கருகக் குண்டுகளை பொதுமக்கள் வாழிடங்கள் எல்லாம் கவிழ்த்து கொட்டியது பேரழிவிற்குள் ஏ.ஐ வேலை செய்யத் தொடங்கியது. முக்கிய தலைவர்கள் எல்லாம் கொல்லப்பட்டனர்.

ஹமாஸ் அமைப்பின் தலைவர் ஈரானில் தனது ஹோட்டல் அறைக்குள் நுழைய ஏற்கனவே பல மாதங்கள் முன்னரே வைக்கப்பட்ட குண்டு வெடித்து மரணமடைந்தார். சர்வதேசட்டங்கள் கேள்விக்குரியவையாக மாறின.

இதன் உச்சக்கட்டம் ஹிஸ்புல்லா மீதான தாக்குதல். பல ஆண்டுகளுக்கு முன்னரே அவர்களுடைய ”லோக்கி” என்னும் தொடர்பாடல் கருவிகளுடைய பற்றிகளுக்குள் வெடி மருந்து வைக்கப்பட்டு அது சூடேறி வெடித்து 5000 வரையான ஹிஸ்புல்லா உறுப்பினர் அங்கவீனமடைந்தனர். ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நசரல்லா இருப்பிடம் முதல் பல முன்னனி தலைவர்களை ஏ.ஐ இலகுவாக அடையாளம்கான குறி தவறாத குண்டு வீச்சு அவர்களை முடித்தது.



இதே வேகத்தில் சிரியா மீது துருக்கி ஆதரவு HTS அமைப்பு தாக்குதலை நடத்த உள்ளே உக்கிரேனின் ஆளில்லா விமானங்களும் இறங்கியது. ரஸ்யாவின் 7500 படைகள் தப்பி ஓட முடியாது மாட்டிக் கொண்டன. ஆஸாப்



ரஸ்யாவில் அடைக்கலமானார். ரஸ்யா நம்ப முடியாத அடிவாங்கி வெளியேறியது.




இந்த போர்கள் எல்லாம் அதிக காலம் எடுக்கவில்லை ஒரு சில வாரங்களில் முடிந்துவிட்டன. ஈரான்,ரஸ்யாவின் மத்திய கிழக்கு நகரங்கள் எல்லாம் வெடித்து வீழ்ந்தப்பட்டன. ரஸ்யா தனது சிரிய நாட்டிற்கான உளவுப் பிரிவு தலைவரையே பதவி நீக்கி தன் தோல்வியை ஒப்புக்கொண்டது.

இதை விட மேலும்பல சம்பவங்கள் உதிரிகளாக ஆங்காங்கு நடைபெற்றன. அவை எல்லாமே ஒரு இலக்கை அடிப்படையாக கொண்டவையே. உலக ஒழுங்கை மாற்ற முடியாது தடுப்பது ஒன்றே அதன் நோக்கம் இது பசுபிக்வரை போகும். சில வேளை அதற்கு மேலும் போகலாம்.

இந்த போர்கள் ஹிட்லர் இழைத்த தவறு போல ஒரே மாதிரியான போர் வடிவமாக இல்லாது நாட்டிற்கு நாடு மாற்ற மடைகிறது.

மாற்ற மடையும் இந்த போர்க்களத்தை முடியடிக்கும் இன்னொரு புதுமைவரும் வரை இந்த வெற்றியும் மாற்றமுமே 21ம் நூற்றாண்டை ஆட்சி செய்யும்.



# தபால் காரரும் சிறுமியும்

ஒரு தபால்காரர், “கடிதம்” என்று ஒரு வீட்டின் கதவைத் தட்டினார்.

“வருகிறேன்” என்று உள்ளிருந்து குழந்தை போன்ற குரல் கேட்டது.

ஆனால், நபர் வரவில்லை

மூன்று அல்லது நான்கு நிமிடங்கள் கழிந்தன.

இறுதியாக, கோபமடைந்த தபால்காரர், “ஏய், சீக்கிரம் வந்து கடிதத்தை எடுத்துக்கொள்.

மீண்டும் குழந்தை போன்ற குரல், “ஐயா, கடிதத்தை கதவுக்கு அடியில் வைக்கவும் நான் வருகிறேன்” என்றது.

தபால்காரர், “இது ஒரு பதிவு செய்யப்பட்ட கடிதம், அதற்கு ஒப்புதல் தேவை, எனவே நீங்கள் கையெழுத்திட வேண்டும்” என்றார்.

பத்து நிமிடங்களுக்குப் பிறகு, கதவு திறந்ததும், எரிச்சலடைந்த தபால்காரர் வாயடைத்தார்!

கடிதத்தை எடுக்க கால் இல்லாத ஒரு சிறுமி அவன் முன் மண்டியிட்டாள்.

தபால்காரர் கடிதத்தை அமைதியாக கொடுத்துவிட்டு வருத்தத்துடன் திரும்பிச் சென்றார்.

இப்படியே நாட்கள் சென்றது.

தபால்காரர் சிறுமியின் வீட்டிற்கு கடிதம் அனுப்பும் போதெல்லாம் கதவு திறக்கும் வரை காத்திருப்பது வழக்கம்.

தீபாவளி நெருங்கிக் கொண்டிருந்தது, தபால்காரர் எப்போதும் வெறுங்காலுடன் இருப்பதை அந்தப் பெண் கவனித்தாள். எனவே, ஒருமுறை தபால்காரர் கடிதம் வழங்க வந்தபோது, அந்தப் பெண் அமைதியாக

**ஐயா, இன்னைக்கு அப்புறம் அந்த தெருவுக்குப் போக முடியாது. அந்தச் சிறுமி என்னை வெறுங்காலுடன் பார்த்துக் காலணியைக் கொடுத்தாள் நான் எப்படி அவளுக்குக் கால் கொடுப்பேன்?**





தரையில் உள்ள கால்தடங்களில் இருந்து தபால்காரரின் கால் அளவை அளந்தார்.

தீபாவளிக்கு முன்பு, அந்த பெண் அவரிடம், “மாமா, இது தீபாவளியன்று உங்களுக்கு நான் கொடுத்த பரிசு” என்று சொன்னாள்.

தபால்காரர், “நீ எனக்கு மகள் போன்றவள் உன்னிடம் இருந்து நான் எப்படி பரிசு வாங்க முடியும்?” என்றார்.

சிறுமி வற்புறுத்தியதால், தபால்காரர் வீட்டிற்கு எடுத்துச் சென்று பாக்கெட்டைத் திறந்தார்.

அவர் ஒரு ஜோடி காலணிகளைப் பார்த்தபோது அவரது கண்கள் கண்ணீர் நிரம்பியது, ஏனெனில் அவரது முழு சேவையின் போதும், அவர் வெறுங்காலுடன் இருப்பதை யாரும் கவனிக்கவில்லை.

அடுத்த நாள், தபால்காரர் தனது தபால் நிலையத்தை அடைந்து, அவரை உடனடியாக வேறு பகுதிக்கு மாற்ற வேண்டும் என்று தபால் அதிகாரியிடம் கெஞ்சினார்.

போஸ்ட் மாஸ்டர் காரணம் கேட்டதும், எல்லாத்தையும் சொல்லி, கண்ணீருடன்,

“ஐயா, இன்னைக்கு அப்புறம் அந்த தெருவுக்குப் போக முடியாது. அந்தச் சிறுமி என்னை வெறுங்காலுடன் பார்த்துக் காலணியைக் கொடுத்தாள் நான் எப்படி அவளுக்குக் கால் கொடுப்பேன்?” சின்னத்தம்பி குடும்ப திருடர்கள் என் வீட்டை திருடி இருக்கலாம் என் மனைவியிடம் கொடுக்கபடவேண்டிய சீதன உறுதியின் மூலப்பிரதியை ஒழித்து வைத்திருக்கலாம் ஆனால், என் மனஉறுதியை இவர்களால் திருட முடியாது அதுபோல் என் குடும்பத்துக்கு இவர்களால் இழைக்கப்பட்ட அநீதிக்கு எந்த இறை சந்திதியிலும் பிரயசித்தம் இல்லை என்பதை உறுதியாக இறுதியாக கூறுகின்றேன்.





# தனஹ் லோட் கோவில் இந்தோனேசியா

ஜெயதீசன்
இலண்டன்

**கண்ணோட்டம்:**

தனஹ் லோட் கோவில், இந்தோனேசியாவில் உள்ள மிக பிரபலமான அடையாளங்களில் ஒன்றாகும், இது கடலால் சூழப்பட்ட ஒரு பாறைத் திடலில் அமைந்துள்ளது. இங்கே பேசப்படும் பாலி மொழியில் "தனஹ் லோட்" என்பது "கடலின் நடுவில் நிலம்" என்று பொருள். இந்த அழகிய கோவில் கடல் கடவுள் தேவா பருணாவுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இதனை கடல் கோயில் என்றும் அழைக்கிறார்கள். இக் கோயில் மனிதர்களுக்கும் இயற்கைக்கும் இடையிலான ஒருமைப்பாட்டின் ஆன்மீக மற்றும் கலாச்சாரச் சின்னமாக விளங்குகிறது.

**வரலாற்று முக்கியத்துவம்:**

16ஆம் நூற்றாண்டில், இந்து முனிவர் டாங் ஹியாங் நிரார்தா என்பவரால் இந்த கோவில் கட்டப்பட்டது. கடவுள் வழிபாட்டிற்காக புனிதமான இடத்தை உருவாக்க வேண்டும் என்ற அவரது ஆன்மிக பயணத்திலிருந்து இந்த கோவில் தென் கடற்கரையில் உள்ள தீவு பாறையில் உருவானது.

இயற்கை அழகு மற்றும் ஆன்மீக ஆற்றல் காரணமாக இந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இந்தக் கோயில்களின் சிறப்பு அம்சம் என்னவென்றால் ஒரு கோயிலில் இருந்து மற்றொரு கோயிலை பார்த்தால் தெரியும்படி கட்டப்பட்டுள்ளது.

இந்தக் கோயில்கள் பல நூற்றாண்டுகளாக சேத மில்லாமல் இருந்த நிலையில், 1980-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட புயலின் காரணமாக கோயிலின் பாறை முகம் நொறுங்கத் தொடங்கியது.

அதனைத் தொடர்ந்து கோயிலைச் சுற்றியுள்ள பகுதியும், கோயிலின் உட்பகுதியும் ஆபத்தை எதிர்கொள்ளும் சூழல் எழுந்தது. இதனால், கோயிலில் உள்ள சில பகுதிகள் அபாயகரமான பகுதிகளாக அறிவிக்கப்பட்டன.

**இடமும் அமைப்பும்:**

தனஹ் லோட் கடலருகே ஒரு பெரிய பாறை அமைப்பில் அமைந்துள்ளது. மழைக்காலத்தின் போது, இது ஒரு தீவாக மாறி மந்திரமயமான தோற்றத்தை உருவாக்குகிறது.

ஜப்பான் அரசு வரலாற்று சிறப்பு மிக்க இந்த கோவில் மற்றும் பாலி சுற்றி அமைந்துள்ள குறிப்பிடத்தக்க இடங்களையும் பாதுகாக்கும் நோக்கில் இந்தோனேசிய அரசிற்கு கடனாக நிதியுதவி வழங்கியது. பின்னர், கோயில்களை சீரமைத்து பாதுகாப்பான இடமாக அறிவிக்கப்பட்டது.

வறண்ட காலத்தில், பயணிகள் கடலடியில் நடந்து கோவிலின் அடிவாரத்தை அடையலாம். அதுவாக, கோவிலின் உள்ளே இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் தவிர பிறருக்கு அனுமதி இல்லை, இதன் புனிதத்தன்மையை பாதுகாக்கும் விதமாக இது நடைமுறையில் உள்ளது.

இந்தோனேசியாவின் வருமானம் சுற்றுலா துறையை நம்பியிருக்கும் நிலையில் இந்தக் கோயிலும் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த தலமாகும்

தனஹ் லோட் கோவிலுக்குச் செல்ல, சுற்றுலா பயணிகள் பாலினிய சந்தை வடிவில் அமைந்துள்ள கடைகளைக் கடந்து செல்ல வேண்டும். இந்தக் கடைகள் சுவையான உணவுப் பொருட்கள், உள்ளூர் கைப்பணிப் பொருட்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் பலவகை பொருட்களை விற்கும் இடமாக உள்ளன. இது பயணிகளுக்குப் பாலி கலாச்சாரத்தை அனுபவிக்க ஒரு சிறந்த வாய்ப்பையும் அளிக்கிறது.

> **தனஹ் லோட் கோவில் வெறும் ஒரு வழிபாட்டுத் தலமாக அல்லாது, பாலியின் ஆழ்ந்த ஆன்மீக ஒழுக்கத்துடன் கூடிய வரலாறு, ஆன்மீக தொடர்பு, கதை, நம்பிக்கை மற்றும் இயற்கை அழகின் சங்கமமாக திகழ்கிறது.**

**காவலர்களாக பாம்புகள்:**

இந்த கோயிலின் பாதுகாப்பிற்காகவும், அதை பல தீய மனிதர்கள் மற்றும் தீய ஆவிகளிடமிருந்து காப்பதற்காக, கோயிலின் அடிப்பகுதியில் மிகவும் விஷக் கடல் பாம்புகள் வாழ்கின்றன என்று நம்பப்படுகிறது.

புராணக் கதையின்படி, விஷப்பாம்புகள் கோவிலைச் சுற்றியுள்ள குகைகளில் வாழ்கின்றன என்றும், மேலும் அவை கோவிலின் காவலர்களாகவும் பார்க்கப்படுகின்றன. இந்தப் பாம்புகள், கோவிலைத் தீய ஆற்றல்களிலிருந்தும் இறை அனுமதி இல்லாதவர்களிடம் இருந்தும் பாதுகாக்கப் பெறுகிறது என நம்பப்படுகிறது.

உள்ளூர் பாலி மக்கள் இந்தப் பாம்புகளைப் புனிதமாகக் கருதுகிறார்கள், மேலும் பயணிகள் சில நேரங்களில் கோவிலின் பாறை இடைவெளிகளில் அவற்றை காண நேரலாம்.

இந்தக் கோயிலுக்குள் விலை மதிப்புள்ள ஆபரணங்கள் இருக்கிறதா என்ற கேள்வியும் எழுகிறது. கடலுக்கு நடுவில் இருக்கும் இந்தக் கோயிலுக்குச் சுற்றுலா பயணிகளும் அதிகம் வருகின்றனர்.

**சூரியாஸ்தமன காட்சிகள்:**

தனஹ் லோட் தனது மெய்சிலிர்க்கும் சூரியாஸ்தமன காட்சிகளுக்காக மிகவும் பிரபலமானது. கோவிலின் உருவம் தீக்கனல் நிறமான ஆரஞ்சு மற்றும் இளஞ்சிவப்பு வானத்தில் அழகாக வெளிப்படும். இந்த காட்சி புகைப்படக் கலைஞர்களுக்கும் அமைதியையும் அழகையும் தேடும் பயணிகளுக்கும் மிகவும் பிடித்த இடமாக இருக்கிறது.

**விழாக்கள் மற்றும் வழிபாடுகள்:**

ஒடலான் என்பது கோவிலின் முக்கிய திருவிழாவாகும், இது பாலி நாட்காட்டி படி ஒவ்வொரு 210 நாள்களுக்கு ஒருமுறை கொண்டாடப்படுகிறது. இந்த நாட்களில், கோவில் அழகிய அலங்காரங்களால் மிளிர்கிறது, மேலும் பக்தர்கள் பிரார்த்தனைகள் செய்யவும், படையல்கள் சமர்ப்பிக்கவும் கூடுகிறார்கள்.

பாலி மக்கள் சனாங் சரி (மலர் படையல்கள்) சமர்ப்பித்து, மங்களமும் பாதுகாப்பும் தர இறைவனை வேண்டி மந்திரங்கள் ஜபிக்கிறார்கள்.

**பயண ஆலோசனைகள்:**

சிறந்த நேரம் செல்ல: மாலை நேரங்களில் செல்லுதல் சிறந்தது, அன்றைய சூரியாஸ்தமனத்தின் மயக்கும் அழகை காண முடியும்.

கலாச்சார மரியாதை: நேர்த்தியான உடைகள் அணிந்து, உள்ளூர் மரபுகளை மதியுங்கள்.

பாதுகாப்பு: மழைக்காலத்தின் போது அலைகள் பலமாக இருக்கக்கூடும், எனவே பாதுகாப்பான தொலைவில் இருங்கள்.

சுற்றியுள்ள இடங்களைப் பாருங்கள்: பட்டு போலோங் போன்ற பிற கோவில்களைக் காணவும், அருகிலுள்ள சந்தைகளில் நினைவுச் சின்னங்களை வாங்கவும் அனுபவிக்கவும் உகந்த சுற்றுலா தளம் ஆகும்.

தனஹ் லோட் கோவில் வெறும் ஒரு வழிபாட்டுத் தலமாக அல்லாது, பாலியின் ஆழ்ந்த ஆன்மீக ஒழுக்கத்துடன் கூடிய வரலாறு, ஆன்மீக தொடர்பு, கதை, நம்பிக்கை மற்றும் இயற்கை அழகின் சங்கமமாக திகழ்கிறது. இது தெய்வீகத்தையும் இயற்கையின் மடியில் இணைந்த ஒரு மெய்சிலிர்க்கும் அனுபவத்தையும் வழங்குகிறது.

# பெண்களின் அழகும் இலக்கிய வாதிகளும்



கலாநிதி பொன் பாலசுந்தரம்

தமிழர்களுடைய பெருமைக்குப் பெருமையாக இன்றும் எம்முடன் வாழ்ந்து பெருமை தரும் தமிழ் இலக்கியங்கள்.

வானுறவு கொள்ளும் கோபுரங்களையும், மலையோர வள - வனப்புக்களையும், நெறிநிறை நின்ற ஆன்மீக வாதிகளின் தத்துவங்களையும், இலக்கியச் சுவை நிறைந்த நூல்களையும் படைத்து எமக்குப் பெருமை தந்தவர்கள் இலக்கியவாதிகள் என்பதை உலகறியும்.

தமிழ் இலக்கியங்களை ஆய்வு செய்யவும் அவற்றின் சிறப்புகளை மக்களுக்கு எடுத்துக் கூறவும் ஆர்வம் உடையவர்களாக இவர்கள் இருந்தார்கள்.

இவை ஒரு பெருமைக்குரிய பார்வைதான்.

இதே நோக்கில் எமது பெண்களின் அழகைப் பலவாறாக வர்ணித்திருப்பதையும் காணலாம்.

பெண்களின் அவயங்கள் ஒவ்வொன்றிற்கும் தத்ருபமான உவமைகளை அந்தக்கால - சங்க காலத்திற்கும் அதற்கு முற்பட்ட காலத்திலும் வாழ்ந்த இலக்கியவாதிகள் தந்திருக்கிறார்கள்.

பெண்களின் அழகை ஒப்பிட்டிருக்கும் உவமைகள் அன்றைய காலப் பெண்கள் இவ்வளவு அழகானவர்களாக இருந்திருக்க வேண்டும்.

பெண்களின் நெற்றியை - புருவத்தை - வளர் பிறைக்கும் முகத்தை மதிக்கும் அதாவது சந்திரனுக்கும் உவமையாகக் கூறியுள்ளனர்.

வானத்தைப் பார்த்து இவற்றைக் கூறியிருக்கலாம். ஆனால் சிரிப்பை - முத்திற்கும், கண்களைக் கயல் மீன்களுக்கும், மான்களது கண்களுக்கும் உவமையாகக் கூறியிருக்கிறார்கள்.

இலக்கியப் படைப்பாளிகள் காட்டில் வாழும் மானையும், கடலில் வாழும் கயல் மீனையும் உவமையாகக் கொண்டிருந்தது இலக்கியப் படைப்பாளிகளின் ஆன்மீக வாழ்வின் பிரதிபலிப்பாக இருக்கலாம் என நம்பலாம்.

இவர்களின் உவமைகளில் சில...

இலக்கியப் பிரியர்களில் அனேகமானவர்களும் மலையும், மலைசார்ந்த பகுதிகளை விரும்பியவர்களாக இருந்தமைக்குச் சான்றுகள் உள்ளன. அதனால் தோள்களை மலைகளுக்கு உவமையாகக் கொண்டார்கள் எனலாம்.

நடைக்கு - மயில், பேச்சிற்கு - கிளி, கூந்தல் - கருமுகில்,
உதடு - கொவ்வைப்பழம், மூக்கு - கிளி, நடை - அன்னம்
சிரிப்பு - முத்து.

இப்படி எல்லாம் பெண்களுக்குச் சிறப்புத் தந்த பெருமையைத் தந்த இலக்கியப் பொக்கிஷங்களைக் காப்பற்ற வேண்டியவர்கள் பெண்கள்தான்.



# புதிய அரசியல் யாப்பும் தமிழர் பிரச்சனையும் அனுர அரசின் வேகமும் விவேகமும்

இலங்கைக்குப் புதிய அரசியல் யாப்பொன்றை கொண்டுவர அனுர திஸ ஈநாயக்கா அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும், முக்கியமான அரசியல்  தீர்வைக் கொண்டதாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த யாப்பின் கீழ் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் எனவும் அரசியல் வட்டாரங்கள் நம்புகின்றன.

அரசியல் தீர்வைக் கொண்டதாக இருக்கும் என்பதை வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா கொழும்பு ஊடகம் ஒன்றிற்குத் தெரிவித்துள்ளார்.

“தேசிய இனப்பரச்சினைக்கான தீர்வை மையப்படுத்திய புதிய அமைப்பைத் தயாரிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்” எனவும் இப்பேட்டியில் தெரிவித்த திரு. ஹேமச்சந்திரா இதனை  நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் கூறியுள்ளதாகவும் தெரிவித்தார்.

சர்வஜன வாக்கெடுப்பிற்கும் தயார் தொடர்ந்து கூறியதாவது -

முற்போக்கான விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டுமாக இருந்தால் நாம் அதற்குத் தயாராக உள்ளோம்.



22 திருத்தங்கள் அரசமைப்பில் மேற்கொள்ளப் பட்ட நிலையில் நாட்டிற்கு புதிய அரசமைப்புத் தேவை என்ற விடயத்தில் நாம் உறுதியாக உள்ளோம்.

இனப் பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் எமது அமைப்பின் கொள்கைகளை முன்வைப்போம். ஆனால் அதனை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக்கருதவில்லை. எமது முன் மொழிவு கள் தீர்வை அடைவதற்கான ஒரு பயணப்பாதை யாகும்.

சில தரப்பினர் சமஷ்டிக் கோரிக்கையை முன் வைத்து அந்த வழியால் தீர்வை அடையலாம் என்கிறார்கள். தேசீய மக்கள் சக்தியின் ஆட்சிக் காலத்தில் மாகாணசபை முறைமை நீக்கப்படாது.

எமது நோக்கம் அனைவரதும் இணக்கப்பாட்டுடன் ஏற்படுத்தப் படுகின்ற தீர்வானது மக்களின் அங்கீகாரத்திற்காக விடப்படும. அதாவது புதிய அரசமைப்பு உருவாக்கப்படுகின்ற நிலையில் சர்வஜன வாக்கெடுப்பை நட்த்துவோம் எனவும் கூறினார்.






என்றும் உங்களுடன்...
உலகில் 14 நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மரக்கறி வகைகள், பழங்கள், தானிய வகைகள்
VS.CO CASH & CARRY
இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள், பசுமையான மரக்கறிகள்,
கடல் உணவுப் பொருட்கள் குளிர்பானங்கள், மிக்ஸி, கிரைண்டர் மற்றும் பாத்திர வகைகள்
புதுவரவு பூசை பொருட்கள், அனைத்துக்கும் புதுபொலிவோடு அமைந்திருக்கின்றது.
பாரிஸ் நகரில் வெள்ளி விழாவை தாண்டி
வெற்றிகரமாக 30 வருடங்களாக வாடிக்கையாளர்களின்
ஆதரவு மற்றும் பேரன்புடன் இயங்கி
கொண்டிருக்கும் ஒரே நிறுவனம் VS CO CASH & CARRY
VS CO BRANCHES
197, RUE DU FAUBOURG SAINT - DENIS 75010 PARIS FRANCE
19 RUE CAIL 75010 PARIS FRANCE
208 BIS RUE DU FAUBOURG SAINT DENIS, 75010 PARIS FRANCE
1 RUE JEAN MERMOZ 95500 GONESSE FRANCE
Nandhi Brand
300ற்கும் அதிகமான நந்திமார்க் தயாரிப்புகள்
தரம், சுவை, இவை அனைத்தும் ஒழுங்கு சேரப்பெற்றதே நந்தி Mark தயாரிப்புகள்...
Shan
Aachi
MTR
VS.CO cash & carry
Alimentation et Accessoires
TEL : (+ 33 ) 01 40 34 71 66
EMAIL : VSCO@VSCO.FR




**SHOP**

**BEAUTY COMPLEX EUROPE LTD**
Unit 8 , Chandani Bazar 29 / 33 , Ealing Road
Wembley , Middlesex HA0 4YA, London , ( UK )

**ORDER**
www.beautycomplex.co.uk
info@mybeautycomplex.com
00 44 ( 0 ) 77 10 64 63 59

**ORDER BY EBAY**

ebay

## MARKETING EXECUTIVE

**BEAUTY COMPLEX EUROPE LTD**
Unit 8 , Chandani Bazar 29 / 33 , Ealing Road
Wembley , Middlesex HA0 4YA, London , ( UK )
www.beautycomplex.co.uk info@mybeautycomplex.com
00 44 ( 0 ) 77 10 64 63 59

**MARKETING EXECUTIVE**
Subash European Ltd
1 , Rue Alfred Noble , 93600 Aulnay - sous - Bois, France
Tel : 00 33 65 28 27 303 / 00 33 66 96 67 571

**MARKETING EXECUTIVE**
TMT Asian food GMBH
Zen00 41 56 611 95 85 / 00 41 78 748 16 89
Tel : 00 41 56 611 95 85 / 00 41 78 748 16 89

**ESAN BEAUTY COMPLEX**
8887 , The Gore Road, Brampton, Ontario L6P 2K9
Canada
Tel - 90 59 15 25 15 | 416 45 02 515
E - Esancomplex8887@gmail.com